பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 27 புதன்கிழமை 13.09.2023 கதிர் 306

# அனு ஆயுத தடை ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட அனுமதி

**அமைச்சரவை நேற்று வழங்கியது**

அனு ஆயுத தடை பற்றிய ஒப்பந்த மொன்றை மேற்கொள்ளவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அரச தகவல் ஊடகத்திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அனு ஆயுத தடை பற்றிய ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்காக 2021 டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2023 செப்டெம்பர் மாதம் நியூயோர்க் நகரில் நடத்தப்படவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தொடருக்கு இணையாக ☞2

## இது ரகசியம் அல்ல!

இலங்கையைத் தெற்காசியாவின் அதிசயம் என்று எந்த முகூர்த்தத்தில் சொன்னார்களோ தெரியவில்லை, எதில் இல்லாவிட்டாலும் அரசியலில் அது ஒரு அதிசயமாகவே திகழ்கின்றது. இங்கு நடக்கும் அரசியல் திருக்கூத்துக்களைப் போன்று உலகில் வேறு எங்காவது நடக்குமா என்பது கேள்விதான்.

உலகில் அனுதாப வாக்குகள் மூலம் ஆட்சியைப் பிடிக்கலாம் என்பதை முதன் முதலில் கண்டுபிடித்து செயற்படுத்திக்காட்டி, அதன்மூலம்உலகின்முதல்பெண்பிரதமரை உருவாக்கிய அதிசயம் முதல் இலங்கை அரசியல் நிகழ்த்திவரும் அதிசயங்கள், அற்புதங்கள் பலப்பல. அவ்வப்போது ஆளும் தரப்பின் தேவைகளுக்கு ஏற்ப நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பணம் கொடுத்து வாங்கும் அதிசயமும் இங்குதான் நடக்கிறது.

எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி - அவர் தமது கட்சியின் கொள்கைக்கு முற்றிலும் மாறான ☞2

## 3 மாதங்களில் 158 பேர் கைது

ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த 3 மாதங்களில் போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்ட 158 பேர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உடபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் குற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றபோதே மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணக் ☞2

## கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு தேசிய கல்விக் கொள்கை அவசியம்

**நீதி அமைச்சர் வலியுறுத்து**

இலங்கையின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு தேசிய கல்விக் கொள் கையொன்றை உருவாக்குவதுகாலத்தின்தேவையாக இருப்பதாக இலங்கையில் உயர் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான பொருத்தமான பரிந்துரைகளைவழங்குவதற்கான நாடாளுமன்றவிசேடதெரிவுக் குழுவின் தலைவர் நீதி அமைச்சர்விஜேதாசராஜபக் ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தி யாளர்களிடம் பேசும்போது அவர்இதனைத்தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டின் கல்வி, உயர் தரத்தில் அமைந்துள்ளது. ஆனால், அவற்றில் நம்பிள்ளைகள் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. இன்றிருக்கும் போட்டித் தன்மையான கல்வி முறை, குழந்தைகளின்திறன், அறிவு மற்றும்புத்திசாலித்தனத்தை வளர்க்கபயிற்றுவிப்பதில்லை. தற்போது மனனம் செய்யும், வெறுமனே அறிவை மாத்திரம் வழங்கும் ஒரு கல்வி முறையே உள்ளது.

ஐந்தாம் தர புலமைப்பிரிசில் பரீட்சை, தொடக்கத்திலேயே ஒரு போட்டித் தன்மையை ஏற்படுத்துகின்றது. ☞2

## பூநகரி குளத்தில் சூரிய மின் திட்டம் முதலீட்டு முன்மொழிவுக்கு அனுமதி

கிளிநொச்சி பூநகரி குளத்தில் சூரிய மின்சக்தி மின்கலச் சேமிப்பு வேலைத் திட்டத்திற்கான முதலீட்டு முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரச தகவல் ஊடகத் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனை அறிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் மீள்புதிப்பிக்கத் தக்க வலுச்சக்திஅபிவிருத்தி வேலைத்திட்டங்களை துரிதமாக நடைமுறைப் படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்குவதற்காக50மெகாவாற் அல்லது அதற்கு அதிகமான இயலளவு கொண்ட மீள்புதிப்பிக்கத்தக்கவலுச்சக்தி அபிவிருத்தித் துறையில் முதலீடுவதற்குஎதிர்பார்க்கின்ற முதலீட்டாளர்களின்விருப்புக் கோரல்களை பெற்றுக் கொள்வதற்குஅமைச்சரவை அங்கீகாரம்வழங்கியுள்ளது. அதற்கமைய,134 மெகாவாற்று மின்சாரத்தை வழங்குவதற்குஇயலுமாகும் வகையில் கிளிநொச்சி பூநகரி குளத்தில் ☞2

## 10 பில்லியன் டொலர் கடன் புது பத்திரங்களுக்கு மாற்றம்

பத்து பில்லியன் டொலர்கள் பெறுமதியான கடனைப் புதிய பத்திரங்களுக்கு மாற்றுவதற்கான சலுகைகளை இலங்கை ஏற்றுக் கொண்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் மீளாய்வுக்கு முன்னதாக கடன் மறுசீரமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒருநகர்வாக மேற்படி தீர்மானத்தினை எடுத்துள்ளதாக நிதியமைச்சு எடுத்துள்ளது.

கடந்தஜூன்மாதம்இலங்கையால் அறிவிக்கப்பட்ட உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத்திட்டத்தின்கீழ், பெருமளவிலான மிகைப்படுத்தப்பட்ட நிதிகளிலிருந்து பத்திரங்கள் பரிமாற்றத்திற்கு அனுமதியளிக்கப்பட்டது.

பரிமாற்றத்திற்கு தகுதியான 8.7 டிரில்லியன் ரூபாபத்திரங்களில்மொத்தம் 3.2 டிரில்லியன் ரூபா ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு பரிமாற்ற திகதி செப்டம்பர் 14 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் இலங்கை பெற்றுக்கொண்ட 2.6 பில்லியன் ரூபா நான்கு வருட வேலைத்திட்டத்தின் முதல் மீளாய்வுக்கான மதிப்பீட்டு செயல்முறையைத் தொடங்குவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின்; பிரதிநிதிகள் குழுவொன்று நாளையதினம் கொழும்புக்கு வரவுள்ளது.

மேலும் தற்போதைய உள்நாட்டு உற்பத்தியில் 120 சதவீதம் கடனுக்கு தேவைப்படுவதோடுஅதனை 2032 ஆம் ஆண்டள வில் 95 சதவீதமாகக் குறைக்கும் இலக்கை இலங்கை நிர்ணயித்துள்ளது.

## ரணில் - பஸில் சந்திப்பு சாகர கூறும் விளக்கம்

நாட்டின் எதிர்காலத்திற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும்சிறிலங்கா பொது ஜன பெரமுனவின் அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் கலந்துரையாடல்கள்இடம்பெறுவதாக பொதுஜன பெரமுனவின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். இந்தக் கலந்துரையாடல்களில் இருவரையும் தவிர வேறு எவரும் கலந்துகொள்ளவதில்லை, எதிர்காலத்துக்கு தேவையானவை பற்றி மட்டுமேபஸில்ராஜபக்ஷஜனாதிபதிக்கு விளக்கமளிப்பார் என்றும் அவர் தெரிவித்தார்.

## நல்லூர் சன நெரிசலில் சிக்கி 3 பக்தர்கள் மயக்கிச் சரிவு

**வீதித் தடையை உடைத் தெறிந்தனர் மக்கள்**

நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாவின் 22ஆம் நாளான நேற்று கடைகள் அமைக்கப்பட்டுள்ள பின் வீதியில் ஏற்பட்ட கடும் நெரிசலில் சிக்கி மூவர் மயக்கமடைந்தனர். இதனால் ஆத்திரமடைந்த பக்தர்கள் சிலர் பருத்தித்துறை வீதியில் இருந்த வீதித்தடையை அடித்து உடைத்துப் பாதை ஏற்படுத்தினர்.

நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் வருடாந்த இந்த வருட பெருந்திருவிழாவின் போது கடைகள் ☞2

## உயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு மதிப்பளிப்பு

**ஜனாதிபதியும் பிரதமரும் வழங்கினர்**

2021 மற்றும் 2022 க.பொ.த உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர்தினேஷ்குணவர்தன ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

திறமையான மாணவர்களுக்கு ஜனாதிபதியின் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பணப் பரிசுகள் என்பன ஜனாதிபதியின் கரங்களினால் வழங்கி வைக்கப்பட்டன.

2022ஆம் கல்வியாண்டில் 6 பாடப் பிரிவுக ☞2

## “தமிழ் நாட்டில் என் மகளின் திருமணத்திற்குச் சென்றேன்”

**ஊடகங்கள் உண்மையை எழுதவேண்டும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**

தமிழ்நாட்டில் என் மகளுடையதிருமணத்திற்கு சென்றேன் என்று ஒரு ஊடகம் எழுதியதாக நான் கேள்விப்பட்டேன். ஊடகங்கள் உண்மைகளை எழுத வேண்டும்.

இப்படித் தெரிவித்தார் மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

”சில ஊடகங்கள் ஊதாரித்தனமாக பொய்யான செய்திகளையெல்லாம் கற்பனையில் எழுதுவினம். ஒருக்கா ஒரு ஊடகம் ஒன்று எழுதியது என்று கேள்விப்பட்டனான் - ஊதாரி ஊடகம் ஒன்று எழுதியதாகக் கேள்விப்பட்டனான் - நான் தமிழ் நாட்டுக்கு என்னுடைய மகளுடைய கலியாண வீட்டுக்குப் போனனான்என்றுஒருஊதாரி ஊடகமும், ஊதாரி ☞2

## கொழும்பு அரசின் அனுமதியுடன் மட்டும் 4 மதுபானசாலைகள் குடாநாட்டில் திறப்பு

**மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்காதபோதும்**

(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணம் மவட்ட நிர்வாகத்தின் எந்தவொரு அனுமதியும்இன்றிகொழும்பு மத்திய அரசால் அணமைக் காலத்தில்4மதுபானசாலைகள் யாழ். மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலர் ஆ.சிவபாதசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் குற்றங்கள் தொடர்பான அதிகாரிகள் மட்டக் கலந்துரையாடல் நேற்றுமாவட்டச்செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்திலேயே யாழ். மாவட்டச் செயலர் இதனைத் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்த 4 மதுபான விற்பனை நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். கொழும்பில் வழங்கப்பட்ட அனுமதியுடன் மட்டுமே இந்தமதுபான சாலைகள் திறக்கப்பட்டுள்ளன என்றும் இதன்போது எந்தவொரு அடிப்படைச் சட்டங்களும் பின்பற்றப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மதுச் சாலைகளுக்கு மாவட்ட நிர்வாகம் எந்தவித அனுமதியையும் வழங்கவில்லை. அதனால்ஆலயங்கள், பாடசாலைகளின் அருகில் இவை திறக்கப்படுவதாக முறையிடப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

கூட்டத்தில் ☞2



## இனி இது .....

கொள்கையையுடைய கட்சியிலிருந்து வந்தவரானாலும் சரி - பணத்தைக் கொடுத்து ஆளை விலைக்கு வாங்கி தமது காரியத்தை நிறைவேற்றும் அதிசயம் இலங்கையைத் தவிர வேறு எங்காவது நடக்குமா என்பது கேள்விதான்.

ஆளும் தரப்புக்கு ஆசனங்கள் போதாதபோது அமைச்சுப் பதவிகளையோ சலுகைகளையோ கொடுத்து நாடாளுமன் உறுப்பினர்களை வளைத்துப் போடுவது எல்லா நாடுகளிலும் நடக்கக்கூடிய காரியம்தான். ஆனால், சந்தையில் பொருட்கள் வாங்குவது போன்று நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அவ்வப்போது வாங்கிப் போட்டுக்கொள்வது இலங்கையில் மட்டுமே நடக்கக்கூடியதொன்று.

நாடாளுமன்ற உறுப்பினர்களை பணம் கொடுத்து வாங்கிப் போட்ட காலம் கடந்து இப்போதெல்லாம் கட்சிகளையே பணம் கொடுத்து வாங்கிப்போடும் அதிசயம் இலங்கையில் அரங்கேறத் தொடங்கியிருக்கிறது. ஒரு அரசியல் கட்சியைத் தொடங்கி, அதனைத் தேர்தல்கள் திணைக்களத்தில் பதிந்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக்குவதற்கான சட்ட திட்டங்கள் இலங்கையில் இறுக்கமானவை. ஆத்திர அவசரத்திற்கெல்லாம் கட்சிகளைப் பதிவு செய்துவிட முடியாது. அதனால் அவசரத்தேவைக்கு இப்போது கட்சிகளையே விலைக்கு வாங்கத்தொடங்கிவிட்டார்கள்.

முதலில் கட்சியொன்றை விலைக்கு வாங்கியிருப்பவர் பிரபல வர்த்தகர் திலித் ஜயவீர. சட்டத்தரணியான இவர், இலங்கையின் மிகப் பெரிய சிங்கள ஊடக நிறுவனமான தெரணவின் உரிமையாளரும்கூட. அது தவிரவும் இவருக்கு பலபெரும் வர்த்தங்கள் இருக்கின்றன. இலங்கையின் மிகப்பெரும் பணக்காரர்களில் ஒருவர்.

இவர் இப்போது மௌபிம ஜனதா கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் அமைச்சரும் ஆளுநருமான ஹேமகுமார நாணயக்காரவிடம் இருந்த கட்சி இந்த மௌபிம ஜனதா. இப்போது அவர் கட்சியின் சிரேஷ்ட தலைவராக்கப்பட்டு திலித் புதிய தலைவராக்கப்பட்டுள்ளார். பணம் கொடுத்து அவர் கட்சியை வாங்கிவிட்டார் என்பதே கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தீவிர பேச்சாக இருக்கின்றது.

மக்களால் விரட்டப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மிக நெருக்கமானவர் திலித். 2019 கோட்டாபய பெற்ற பெரு வெற்றியின் பின்னணியில் திலித்தின் பெரும்பங்கு இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை. அவரது தெரண ஊடகம் கோட்டாபயவை தேர்தல் நேரத்தில் கண்மூடித்தனமாக ஆதரித்தது. கோட்டாவின் வீழ்ச்சியின் பின்னர், பொதுஜன பெரமுனவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக திலித்தைக் கொண்டுவருவதற்கு கோட்டாபய விரும்பினார், முன்முகற்சிகளை நகர்த்தினார். ஆனால், அது வெற்றிபெறவில்லை.

கோட்டாபயவின் செயல்களால் தமக்கு ஏற்பட்டுள்ள அரசியல் பின்னடைவுகள் குறித்து கடும் அதிருப்தியில் இருக்கும் பெரமுன கோட்டாவுக்கு நெருக்கமானவரான திலித்தையும் நிராகரித்துவிட்டது. ஆக, பெரமுன ஊடாக அரசியல் நுழைவு சாத்தியமல்ல என்பது தெளிவானதைத் தொடர்ந்தே, திடீரென மௌபின ஜனதா கட்சியைப் பெற்று அதற்கூடாக முழு நேர அரசியலில் குதித்திருக்கிறார் திலித். அவரது கட்சியின் ஊடாக கோட்டாபயவும் மீண்டும் அரசியல் களத்திற்கு வரலாம் என்கிற அரசல் புரசலான செய்திகளும் கொழும்பு அரசியலில் உண்டு. ஆனால் சமூக ஊடகங்கள் ஊடாகக் கருத்துத் தெரிவித்த திலித் அத்தகைய செய்திகள் அனைத்தும் பொய் என்று தெரிவித்திருக்கிறார். யார் வேண்டுமானாலும் தன்னோடு தொடர்பு கொண்டால் தனது அரசியல் கட்சி மற்றும் அரசியல் பயணம் பற்றித் தெளிவுபடுத்தத் தயாராகவே இருக்கிறார் என்றும் பதிவிட்டுள்ளார்.

வர்த்தகர் திலித்தைத் தொடர்ந்து மற்றொரு கட்சியை வாங்கியிருப்பவர் நாடாளுமன்றத்தில் சுயாதீன அணியான சுதந்திர மக்கள் சபையின் நாடாளுமன்ற உறுப்பினரான நிமல்லன்சா. இவர் தனது எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்காக லிபரல் ஜனநாயகக்கட்சியை பெற்றுக்கொண்டுள்ளார்.

1981ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகிய கலாநிதி.சானக அமரதுங்கவினால் தொடங்கப்பட்டது கட்சி லிபரல் ஜனநாயகக் கட்சி. 1987ஆம் ஆண்டு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டது.

சானக 1996 ஆம் ஆண்டு வாகன விபத்தில் உயிரிழந்ததை அடுத்து கட்சியின் தலைவராக பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க நியமிக்கப்பட்டார்.

அவர், 2022ஆம் ஆண்டு லிபரல் கட்சியை லிபரல் ஜனநாயகக்கட்சி என்று பெயர்மாற்றம் செய்திருந்தார். தற்போது இக்கட்சியின் தலைவராக கமல் நிஷ்சங்க தலைவராகவும் அமல் ரந்தெனிய பொதுச் செயலாளராகவும் செயற்படுகின்றனர். அவர்களிடமிருந்தே நிமல் லன்சா கட்சியை வாங்கியுள்ளார்.

ராஜபக்ஷக்களின் மொட்டுக் கட்சிக்கூடாக நாடாளுமன்ற உறுப்பினரானவர் நிமல் லன்சா. ஆனால், இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசுவாசி. ரணிலுக்கு ஆதரவாக மொட்டுக் கட்சியில் இருந்தே ஆட்களைத் திரட்டுவதில் மும்முரமாக இருக்கக் கூடியவர். ஜனாதிபதி செயலகத்தில் அவருக்கென ஒரு தனி அலுவலகமே ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது தவிர அயலுறவுத்துறை அமைச்சருக்கு என ஒதுக்கப்பட்ட அரச வீடும் இப்போது நிமல் லன்சாவின் அரசியல் பணிகளுக்காகவே வழங்கப்பட்டிருக்கிறது.

அதற்கு மேலாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரித்து ஒரு கூட்டணியை உருவாக்குவதிலும் நிமல்லன்சா அதி தீவிரமாகச் செயலாற்றி வருகின்றார். இதற்கென இவர் ஏற்கனவே அரசியல் அலுவலகம் ஒன்றையும் திறந்திருந்தார். இந்தப் பின்னணியிலேயே அவர் புதிய கட்சியை வாங்கியுள்ளார்.

மொட்டுக்கட்சியில் இருந்து வருபவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் ஐக்கியமாகாமல் இந்தக் கட்சியில் இணைந்து கொண்டு ஐ.தே.கவுடன் கூட்டணி அமைத்துக்கொள்வதற்கு வசதியாக இந்த நகர்வு முன்னெடுக்கப்பட்டிருக்கக்கூடும் என்று கருதப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அணு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக நடத்தப்படவுள்ள நிகழ்வில் இலங்கை அணு ஆயுத தடை பற்றிய ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிவவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார்.

## உயர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளிலும் தேசிய மட்டத்தில் முதல் 10 இடங்களுக்குத் தெரிவான 60 மாணவர்களும், 2021 கல்வியாண்டில் 6 பாடப்பிரிவுகளில் தேசிய மட்டத்தில் முதல் 5 இடங்களைப் பிடித்த 30 மாணவர்களுமாக மொத்தம் 90 மாணவர்களும் ஜனாதிபதியால் கௌரவிக்கப்பட்டனர்.

6 உயர்தரப் பாடப்பிரிவுகளையும் உள்ளடக்கி நாடு முழுவதும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களுக்குத் தெரிவான மாணவர்களுக்கு தலா 50,000 ரூபா ரொக்கப் பரிசுகளும், ஏனைய இடங்களுக்கு தலா 25,000 ரூபா ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டது.

உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடிய ஜனாதிபதி, கல்வி தொடர்பான கருத்துக்களை தெரிவிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

இங்கு மாணவி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், தனது நண்பர்களுடன் பேசும்போது, எதிர்காலத்தில் இலங்கையில் தான் மட்டும் எஞ்சியிருக்கும் நிலை ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்பட்டதாகத் தெரிவித்தார். தனது நண்பர்கள் அனைவரும் கல்வி கற்று முடிந்த பின்னர் வெளிநாடு செல்ல எதிர்பார்த்துள்ளதாகவும், உயர்கல்வி பெறும் அனைவருக்கும் இலங்கைக்கு சேவை செய்வதற்கான வேலைத்திட்டம் தேவை எனவும் அவர் கூறினார்.

மற்றொரு மாணவி கருத்துத் தெரிவிக்கையில், உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றுவது இளவயது மாணவர்களே என்றும் அவர்களுக்குத் தேவையான பாடங்களை 40 நிமிடங்களாகப் பிரிப்பது அவர்களின் பாடம் தொடர்பான அறிவைக் கற்கத் தடையாக இருப்பதாகவும் தெரிவித்தார். மேலதிக வகுப்புகளில் பாட அறிவைக் கற்கும் கால அவகாசம் பலமணிநேரங்கள் என்றும் அதனால்தான் மேலதிக வகுப்புக் கல்வி வெற்றிகரமானது என்று பலர் கூறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த மாணவி ஒருவர், உயர்தரத்திற்கு அரசால் வழங்கப்படும் பாடப்புத்தகங்கள் உயர் தரத்தில் இருப்பதாகவும், அந்த பாடப் புத்தகங்களின் உள்ளடக்கங்களை மேலதிக கல்வி வகுப்புகளில் மேலும் மேம்படுத்த முடியும் என்றும் கூறினார். நடைமுறைக் கோட்பாடுகளை அதிகப்படுத்துவதன் மூலமே உயர்தர மாணவர்களை பாடசாலையில் தக்கவைக்க முடியும் என்பது தனது கருத்து எனவும் அவர் தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் மிகச் சிறந்த பொறுபேறுகளைப் பெற்று தற்போது பல்கலைக் கழகத்தில் முதலாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் நாடளாவிய ரீதியில் இரண்டாமிடம் பெற்ற தான் சிறுவயது முதல் ஆடை வடிவமைப்பில் ஆர்வம் கொண்டிருந்தார் எனவும் மொரட்டுவ பல்கலைக் கழகத்தில் அந்தப் பாட நெறியைத் தெரிவு செய்ததாகவும் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், அந்தத் துறையில் பட்டம் பெற்று இலங்கையில் தொழில்வாய்ப்புகள் பெற முடியுமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது என்றார்.

எனவே, பல்கலைக் கழகங்களுக்குத் தேர்வு செய்யப்படும் போது, பட்டப் படிப்புக்கான பாடத்தை தெரிவு செய்வதில், அரசு வழிகாட்டுதல்களை வழங்கினால், திறமையான மாணவர்கள் குழுவை உருவாக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய பல்கலைக்கழக முதலாமாண்டு மாணவர் ஒருவர், பல்கலைக் கழகங்களில் உள்ள பிரச்சினைகளை அரசுடன் நேரடியாகப் பேசுவதற்கு தளமொன்று இல்லாததால், பல பிரச்சினைகள் ஏற்படுவதாகவும், எனவே, மாதம் ஒருமுறை அதற்கு தகுந்த வாய்ப்பை வழங்க வேண்டும் என்றும் இதன் மூலம் அரசு மற்றும் பல்கலைக்கழக மாணவர் சமூகம் ஆகிய இரு தரப்பினருக்கும் இடையில் நிலவும் தவறான புரிதல்களையும் அவநம்பிக்கையையும் குறைக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 13 வருடங்கள் எடுக்காமல் அதற்கு முன்னர் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கினால் மாணவர்கள் பட்டப் படிப்பை விரைவாக முடித்து வேலையைப் பெற வாய்ப்புக் கிடைக்கும் என மற்றொரு மாணவர் தெரிவித்தார்.

இவ்வாறு மாணவர்களினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளையும் கருத்துகளையும் செவிமடுத்த ஜனாதிபதி அவை தொடர்பில் அவதானம் செலுத்தவுள்ளதாக குறிப்பிட்டார்.

சான்றிதழ்கள் மற்றும் ரொக்கப் பரிசுகளை பெற்றுக் கொண்ட மாணவர்கள் ஜனாதிபதியுடன் குழு புகைப்படமும் எடுத்துக்கொண்டனர். நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் காலை உணவு மற்றும் பகலுணவு என்பனவும் வழங்கப்பட்டதோடு தாமரை கோபுரம் மற்றும் கொழும்பு துறைமுக நகரம் என்பவற்றை மாணவர்கள் இலவசமாக பார்வையிட ஜனாதிபதி அலுவலகம் ஏற்பாடுகளையும் செய்திருந்தது.

இளைஞர் விவகாரம் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான ஜனாதிபதியின் பணிப்பாளர் ரந்துல அபேவீர இந்த நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்தினார். தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க, ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் டபிள்யூ. ஏ.சரத்குமார, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர மற்றும் அதிகாரிகள் குழுவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவிலாளரும் எழுதியதாக நான் கேள்விப்பட்டனான்" என்றார் அவர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் குற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் தனது மகளின் திருமணம் பற்றிய பிரச்சினையைக் கூறினார்.

கேட்கப்பட்ட கேள்விக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லாமல் அவர் இந்தப் பதிலைத் தெரிவித்தார். அதற்கு, "எனக்கு ஞாபகம் வரும்போது இவற்றைச் சொல்கிறேன்" என்கிற நியாயப் பாட்டையும் தெரிவித்தார்.

தனது மகளது திருமணம் தொடர்பான பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊதாரி ஊடகம், ஊதாரி ஊடகவியலாளர் என்று எல்லாரையும் நான் சொல்ல வரவில்லை. ஊடகங்கள் மக்களுக்கு உண்மையச் சொல்லவேணும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். கடந்த காலங்களில் இப்படிப் பொய்களைச் சொல்லி இப்படி மக்களை இன்றைக்கு நடுத்தெருவில் விட்டாச்சு. ஆனபடியினால் வருங்காலங்களிலையாவது அதை உணர்ந்து கொண்டு ஊடகவியலாளர்கள் செயற்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இவற்றைப்பற்றிக் கவலைப்படப்போவதில்லை. நான் பிழை என்றால் மன்னிப்புக் கேட்பேன் அதற்குப் பரிகாரம் தேடுவேன். சரி என்று சொன்னால் நான் புள்டோஸ் (புள்டோஸர் போட்டு தரைமட்டத்தோடு அழிப்பது) பண்ணிக்கொண்டு போவேன். இதுதான் என்னுடைய அரசியல் - என்றார் அவர்.

## நல்லூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ள பின் வீதிக்குச் செல்வதற்கும் திரும்புவதற்கும் ஒரு வழிப்பாதை மட்டுமே ஆலய நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது.

ஆலயத்தின் தென்மேற்கே உள்ள பருத்தித்துறை வீதி - தெற்கு கோபுரத்தையொட்டிச் செல்லும் வீதி - நல்லை ஆதீன முனையில் முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. மேற்கே உள்ள பழைய பருத்தித்துறை வீதியால் மட்டுமே பக்தர்கள் கடை வீதிக்குள் நுழையவும் வெளியேறவும் அனுமதிக்கப்படுகின்றனர்.

இதன் காரணமாக இந்த வீதியில் ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கான பத்தர்கள் பயணிக்கின்றனர். அது சன நெரிசலுக்கு வழி ஏற்படுத்துகின்றது. நேற்று மாலை இவ்வாறு ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி மூவர் மயக்கமடைந்தனர். அவர்கள் உடனடியாகத் தூக்கிச் செல்லப்பட்டு சுகாதர வைத்திய அதிகாரி பணிமனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சனநெரிசல் அதிகரித்து மக்கள் இடர்படுகின்றனர் என்பதை யாழ். மாநகர சபை ஆணையாளருக்குச் சிலர் அறிவித்தனர். அத்தோடு பருத்தித்துறை வீதித் தடையை - நல்லை ஆதீன முனையில் உள்ள தடையை - அகற்றி நெரிசலைக் குறைக்க உதவும்படி கோரினர். ஆனால், அந்தத் தடை ஆலய உத்தரவின் பெயரில் ஆலயத்தினால் அமைக்கப்பட்டது என்று தெரிவித்து அதனை அகற்ற ஆணையாளர் த.ஜெயசீலன் மறுத்து விட்டார் என்று கூறப்படுகின்றது.

இதனால் ஆத்திரமடைந்த பக்தர்கள் வீதித்தடையை உடைத்தெறிந்து நெரிசலைத் தவிர்த்தனர்.

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டபோதும் அது தொடர்பில் எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை.

## 3 மாதங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டில் போதைப் பொருள் காரணமாக ஜூன், ஜூலை, ஓகஸ்ட் ஆகிய மூன்று மாதங்களில் மட்டும் இந்த 158 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் ஹெரோயின் பாவனைக்காக 142 பேரும், கஞ்சா பாவனையில் ஈடுபட்ட 11 பேரும் ஐஸ் பயன்படுத்திய ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸாரின் எல்லைப் பரப்பிற்குள் மட்டுமே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## பூநகரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூரிய மின்சக்தி மின்கலச் சேமிப்புத் தொகுதியுடன் கூடிய 700 மெகாவாற்று சூரிய மின்னுற்பத்தி நிலையமொன்றை அமைப்பதற்கான முன்மொழிவு யுனைட்டட் சோலர் எனோர்ஜி எஸ் எல் தனியார் கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1,727 மில்லியன் அமெரிக்க டொடலர்கள் மொத்த முதலீட்டுடன் கூடியதும், மற்றும் 100% வீதம் வெளிநாட்டு முதலீடாக உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள் ளதுடன், அதில் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உள்நாட்டு கருத்திட்டப் பகுதிக்குப் பயன்படுத்துவதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. உத்தேசக் கருத்திட்டத்தின் ஒரு பகுதியாக 13.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் கடல்நீர் உட்புகுவதைத் தடுப்பதற்காக பூநகரிக் குளத்தைச் சுற்றி 3 அணைக்கட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்டு குறித்த குளத்தை புனரமைப்பதற்கும் கம்பனி முன்மொழிந்துள்ளது.

அதற்குப் பதிலாக குறித்த குளத்தின் ஆழமற்ற பகுதியான 1,080 ஏக்கர்களில் 700 மெகாவாற்று சூரிய மின்சக்தி நிலையத்தை அமைப்பதற்கு 35 வருடகால குத்தகை ஒப்பந்த அடிப்படையில், குறித்த கம்பனிக்கு வழங்குவதற்கு தற்போது வடக்கு மாகாண சபை, வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் போன்றன உடன்பாடு தெரிவித்துள்ளன.

அதற்கமைய, யுனைட்டட் சோலர் எனர்ஜி எஸ் எல் கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்திட்ட முன்மொழிவை கொள்கை ரீதியாக ஏற்றுக் கொள்வதற்கும், குறித்த முன்மொழிவை மதிப்பீடு செய்து பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காகவும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தை உடன்பாட்டுக்குழுவொன்றை நியமிப்பதற்கும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார்.

## கல்வித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போட்டியால் குழந்தைகளிடையே வெறுப்பும், கோபமும் எழுகிறது. பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்றாலும், மறுபுறம் மானிடப்பண்புகளில் வளர்ச்சி ஏற்படுவதில்லை. மேலும், சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளிலும் போட்டி நிலவுகிறது. போட்டித் தன்மையைக்கொண்ட கல்வி முறை இருக்கும் வரை, நாட்டிற்காக ஒருதன்னலமற்ற சமூகத்தை உருவாக்குவது கடினம்.

உலகில் வளர்ந்த நாடுகளில் உள்ள கல்வி முறையைப் பார்த்தால் சாதாரண தரம் போன்ற பரீட்சைகள் நடைபெறுகின்றன. ஆனால் புள்ளி வழங்கும் முறை இல்லை. ஒவ்வொரு பிள்ளையையும் சித்தி அடையச் செய்வதுடன், குறைந்த புள்ளிகளைக் கொண்ட பிள்ளைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படுகிறது. சிறந்தக் கல்வியைக் கொண்ட நாடாகத் தரவரிசையில் முன்னிலையில் உள்ள பின்லாந்தில் 1970 இல் நம் நாட்டில் இருந்த அதே கல்வி முறையே இருந்தது.

பிள்ளைகளுக்கு ஒய்வுடன் கூடிய மன நிலை இருக்கவில்லை என்றால், அறிவைப் புரிந்துகொள்வது கடினம். பல நாடுகளில் பிரத்தியேக தனியார் வகுப்புக்கள் நடத்தப்படுவதில்லை. ஆனால் அவர்கள் கல்வி நிலையில் வெற்றிகரமாக உள்ளனர். போட்டியின் பின்னர் பல்கலைக்கழகங்களுக்குள் பிரவேசிக்கும் பெரும்பாலான மாணவர்கள், மன உளைச்சலுக்கு ஆளாகியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்தக் காரணங்களுக்காக, பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்படும் முன்னுரிமையை முன்பள்ளி மேம்பாட்டுக்கும் வழங்க வேண்டும் என்று நாம் பரிந்துரைத்துள்ளோம். உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு கற்பிப்பது கடினமல்ல. ஆனால் முன்பள்ளிப் பருவத்தையே நாம் முதலில் சீர்செய்ய வேண்டும்.

தற்போது உயர்கல்வி முறையில் ஒருஒழுங்கமைக்கப்படாத கல்வி முறையே காணப்படுகின்றது. 16 அரச பல்கலைக்கழகங்கள் உள்ளன. அந்த அரச பல்கலைக்கழகங்கள், பல்கலைக் கழகமானியங்கள் ஆணைக் குழுவால் நிர்வகிக்கப்பட்டாலும், அவை சுதந்திரமாக செயல்படுகின்றன. பல்கலைக்கழகங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளையே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிறைவேற்றுகின்றது. இலவசக்கல்வி தனியாருக்குத் திறந்து விடப்பட்டாலும் அதற்கான முறையான பொறிமுறையொன்று இன்னும் தயாரிக்கப்படவில்லை.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களும், அவற்றின் கிளைகளாக இயங்கும் பல்கலைக்கழகங்களும் இந்நாட்டில் உள்ளன. அவற்றின் தரத்தைக் கண்காணிக்கவும் எந்தப் பொறிமுறையும் இல்லை. தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் கல்வி நிறுவனங்கள் உள்ளன. தொழிற்கல்வி நிறுவனங்களுக்கு பல்கலைக்கழகங்களுக்கு இருக்கும் அங்கீகாரம் இல்லை. தற்காலத்தில் தொழில் பயிற்சிக் கல்வி நாட்டின் தேவையாக இருப்பதனால், அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில் நாட்டின் இளைஞர் சமூகம் தொழிற்கல்வியில் கவனம் செலுத்துவதை தவிர்த்து வருகின்றது. ஏனைய நாடுகளில், அவர்களுக்கு தமது தொழில்பயிற்சி தொடர்பான பட்டத்தை வழங்குகிறார்கள். இங்கு அவ்வாறு தொழில்பயிற்சிக்காக குறித்த நிறுவனங்களால் பட்டம் வழங்கப்படுவதில்லை. அதனால்தான் இந்த நாட்டின் கல்வி முறையில் முழுமையான மாற்றம் இடம்பெறவேண்டும் என்று நாங்கள் பரிந்துரைத்துள்ளோம்.

இந்திய மாதிரியை ஆய்வு செய்து, 1978 இல் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு இலங்கையில் நிறுவப்பட்டது . இப்போது இந்தியா அந்த உயர் கல்வி முறையை நீக்கிவிட்டு வெகுதூரம் சென்றுவிட்டது. இன்று இந்தியாவில் ஒரு சுதந்திரமான உயர்கல்வி ஆணைக்குழுவே உள்ளது. கல்வித்துறை, அரசுக்குரியதா அல்லது தனியாருக்குரியதா என்பதைப் பொருட்படுத்தாமல், முறையான தரநிலைகளின்படி கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடுகளுடன் பல்கலைக்கழகங்கள் அங்கு பதிவு செய்யப்படுகின்றன.

நமது நாட்டில் உயர் கல்வி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கத் தவறுவதனாலேயே சில மாணவர்கள் வெளிநாடு செல்கின்றனர். மேலும், மாணவர்களின் காலத்தை வீணடிப்பது கடுமையான குற்றமாகும். பரீட்சை முடிந்து பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை, பல மாதங்களாக அவர்கள் வீட்டிலேயே தங்கியிருக்கின்றனர். மாணவர்களின் காலத்தை வீணடிக்கும் கல்வி முறை மாற்றப்படவேண்டும்.

இவ்வாறான நிலையில், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபைக்குப் பதிலாக சுயாதீனமாக செயற்படக்கூடிய உயர்கல்வி ஆணைக்குழு ஒன்றை நாம் முன்மொழிந்துள்ளோம்.

இனிமேல், கல்விக் கடைகள் உருவாக்கப்படுகின்றன என்றும், கல்வி, பணத்திற்கு விற்கப்படுகின்றது என்றும் கல்வி தரமற்றது என்றும் யாரும் கூற முடியாது. கடந்த காலத்தில் கல்வி முறையில் ஏற்பட்ட தவறுகள் எதிர்காலத்தில் நடபெறாமல் இருக்க பல்வேறு ஆலோசனைகளை முன்வைத்துள்ளோம். மேலும், 10 ஆம் வகுப்பில் சாதாரண தரப் பரீட்சையையும், 12ஆம் வகுப்பில் உயர்தரப் பரீட்சையை நடத்துவது குறித்தும் பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம்.

ஒரு தெரிவுக் குழுவாக, இதுபோன்ற பல்வேறு அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஆழமாக ஆய்வு செய்த பின்னரும், நிபுணர்கள், வல்லுனர்கள் உட்பட துறைசார் நபர்கள் அனைவரிடமும் கருத்துகளைப் பெற்றே குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள இலவசக் கல்வி முறை தொடர்பில் விரிவான கருத்தாடல் ஒன்று அவசியம். நாட்டுமக்களையும் உள்ளடக்கிய தேசிய அரச கொள்கையொன்றைத் தயாரிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் சட்டமொன்றை நிறைவேற்றுவதன் மூலமே இந்தக் கொள்கை தயாரிக்கப்படவேண்டும். அரசுகள் , அமைச்சர்கள் மாறிவிட்டார்கள் என்பதற்காக அந்தக் கொள்கை மாறக்கூடாது.

இந்த நாட்டில் கல்வி முறையில் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவது குறித்து சிலர் அரசியல் ஆதாயம் அடையலாம். பிள்ளைகளின் கல்வியை அழித்துவிடுவதா? இல்லையா? என்பதை நாட்டு மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும். எனவே, நாட்டின் கல்வி முறையை மாற்றுவதற்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்க நாம் தயாராக உள்ளோம். ஆனால் இந்த நாட்டில் உயர்கல்வியை சீர்குலைக்கும் அமைப்புகளுக்கு வேண்டியவாறு செயற்பட இந்த ஆட்சி தயாராக இல்லை - என்றார்.

# ஹெரோயினை குறைந்த விலையில் வாங்க சென்று வருவதால் விபத்து ஏற்பட்டு சாவுகள்

## நிகழ்கின்றன என்கின்றன மருத்துவ வட்டாரங்கள்

ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணத்தைவிட துன்னாலையில் ஹெரோயின்விலை குறைவு என்பதற்காக அதனை வாங்க மோட்டார் சைக்கிள்களில் வேகமாகச் சென்று விபத்தில் சிக்கி இது-வரையில் 4 பேர் உயிரிழந்துள்ளனர் என்று யாழ். போதனா வைத்தியசாலை தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

"யாழ்ப்பாணத்தில் 2 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனையாகும் ஹெரோயின் துன்னாலையில் ஆயிரத்து 200 ரூபா விலையில் கிடைக்கிறது. அதனைப்பெற யாழ்ப்பாணத்தில் இருந்து பலர் சென்று வரும்போது ஏற்பட்ட விபத்தில் இதுவரை நால்வர் உயிரிழந்துள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் குற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அமைச்சரும் இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. அதில் யாழ். போதனா வைத்தியசாலை சார்பில் பங்குகொண்ட மருத்துவர் இந்த விடயத்தைக் கவனத்திற்குக் கொண்டுவந்தார். உயிரிழந்தவர்களின் இறப்பு விசாரணை யின்போது இந்த விவரங்கள் தெரியவந்திருப்பதாக அவர் அங்கு குறிப்பிட்டார். இதேநேரம், அங்கே யார் ஹெரோயினை விற்கிறார்கள் என்பது தெரியும் என்றும், பொலிஸாருக்கு இடத்தைத் தெரியப்படுத்தினால் அவர்கள் அங்கு செல்ல முடியாது என்று சொல்கிறார்கள் என்றும் மருத்துவர் கூட்டத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். பதிலளித்த வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், இலங்கை முழுவதும் இன்று போதைப் பொருள் பாவனை ஏற்பட்டுள்ளது. பொலிசாரும் அதனை தடுக்க முயல்கின்றனர். நாட்டிலேயே போதைப் பொருள் பாவனை குறைந்த மாவட்டம் யாழ்ப்பாணம். இங்கு அதிகமாக போதைப்பொருள் பிடிபட்டாலும் அவை தெற்கிற்கே எடுத்துச் செல்லப்படுகின்றன - என்றார்

## அப்புத்தளை கொலைச் சந்தேகநபர்களை கைதுசெய்ய பொதுமக்கள் உதவி நாடல்

அப்புத்தளை கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்ய பொதுமக்களின் உதவியை பொலிஸார் நாடியுள்ளனர். அப்புத்தளையில் இடம்பெற்ற கொலைச்சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கும் கொலைக்கு பயன்படுத்திய வாகனம் ஒன்றை கைப்பற்றுவதற்கும் பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

இது குறித்து பொலிஸார் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

அப்புத்தளையில் கடந்த ஒகஸ்ட் மாதம் 22 ஆம் திகதியன்று, வாகனத்தில் வந்த இனந்தெரியாத குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றுமொருநபர்படுகாயமடைந்தார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த இலக்கத் தகடு போலியானது என விசாரணைகளில் தெரிய-வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, இதுதொடர்பில் பொதுமக்களின் உதவியை பொலிஸார் நாடியுள்ளதுடன், இது தொடர்பான தகவல்களை தியத்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி - 071 859 1531 அல்லது பண்டாரவளை பொலிஸ் - 057 222 2260 /057 223 1612 ஆகிய இலக்கங்களுக்குத் தெரிவிக்குமாறும் கோரியுள்ளனர். (05)

## சஷி வீரவன்ஸவுக்கு எதிரான வழக்கின் விசாரணை வேறு நீதிவானுக்கு மாற்றம்



சஷி வீரவன்சவுக்கு எதிராகக் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை வேறு ஒரு நீதிவானுக்கு மாற்றுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சஷி வீரவன்ஸ சமர்ப்பித்த விண்ணப்பத்தை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதன்படி, நேற்று (செவ்வாய்க்கிழமை) கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் தொடர்புடைய வழக்கு விசாரணைக்கு வரவழைக்கப்பட்டதன் பின்னர், அந்த வழக்கை வேறொரு நீதிவானுக்கு வழங்க உத்தரவிட்டார். (05)

## தனியார் பஸ்களிடையிலான போட்டி மின்மாற்றியைச் சேதமாக்கி முடிந்தது






அம்பலாந்தோட்டை நகரில் தனியார் பஸ் ஒன்று மின்சார சபையின் மின்மாற்றியுடன் மோதி முற்றாக சேதமடைந்துள்ளதுடன், அம்பலாந்தோட்டை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இரண்டு தனியார் பஸ்களுக்கிடையில் ஏற்பட்ட போட்டி காரணமாக தனியார் பஸ்ஸில் ஏறிய ஒரு குழுவினர், சாரதியை தாக்கியதுடன், பஸ்ஸை அம்பலாந்தோட்டை பொலிஸ் நிலையத்தை நோக்கிச் செலுத்துமாறு நிர்ப்பந்திக்கப்பட்டபோது கட்டுப்பாட்டையி-ழந்த பஸ் மின்மாற்றியுடன் மோதியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலி-ஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

## ஐஸ் ஏற்றி வந்த கப் புரண்டது



( வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை பிரதேசத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி சென்று கொண்டிருந்த ஐஸ் ஏற்றிய கப் வாகனம் நேற்று அதிகாலை தடம்புரண்டது.

கல்முனை பாண்டிருப்பு பிரபல தியேட்டர் ஒன்றுக்கு முன்னாள் உள்ள வளைவிலே இந்த விபத்து ஏற்பட்டது.

கப் வாகனத்தின் பின் சக்கரம் வெடித்து இந்த விபத்து இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தடம் புரண்டதால் நிறைய ஐஸ் கட்டிகள் வீதி எங்கும் சிதறின. இதனால் போக்குவரத்து ஒரு சில மணி நேரம் பாதிக்கப்பட்டது.

இதே வேளை வாகனத்தின் சாரதியும் காப்பாளரும் சிறு காயங்களுக்கு உள்ளாகி அருகில் உள்ள கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்கள்.

## காதலியைத் தாக்கிக் கொன்ற காதலன் கைதாகி மறியலில்

எல்லக்கல பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து காதலன் தாக்கியதில் பலத்த காயங்களுக்குள்ளாகி வத்துபிட்டிவல போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த காதலி உயிரிழந்துள்ளார் என நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் விவசாய பட்டதாரியான குருணாகல் ரிதிகம பிரதேசத்தில் வசிக்கும் 28 வயதுடைய யுவதியே உயிரிழந்துள்ளார்.

காதலியை தாக்கிய காதலன் இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடையவர் ஆவார். அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

தாக்குதலுக்கு உள்ளான காதலி வேறு ஓர் இளைஞருடன் காதல் தொடர்பு வைத்திருந்ததாக எழுந்த சந்தேகத்தின் அடிப்படையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரிய-வந்துள்ளது. (05)

## பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டு சந்தேகநபர் மருத்துவமனையில் சாவு

பாலியல் துஸ்பிரயோக குற்றச்சாட்டுக்கு உள்ளான நபர், தனது உயிரை மாய்க்க முயன்ற நிலையில் காப்பாற்றப்பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியைச் சேர்ந்த சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கினார் எனும் குற்றச்சாட்டில், கடந்த 3ஆம் திகதி காரைநகர் பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரை ஊர்காவற்துறை பொலிஸார் கைது செய்ய அவரது வீட்டுக்கு சென்றபோது, குறித்த சந்தேகநபர் தனது உயிரை மாய்க்க முயன்றுள்ளார்.

அவ்வேளை அவர் காப்பாற்றப்பட்டு, காரைநகர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார். (05)

# வீதியின் குறுக்கே படகுகளை வைத்து திருமலையில் திங்களன்று போராட்டம்





சட்டவிரோத வலைகளை பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கு எதிராக திருகோணமலை சிறிமாபுர மீனவர்கள் திங்கட்கிழமை காலை வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை கடற்பரப்பில் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலை மற்றும் டிஸ்கோ வலைகளை பயன்படுத்தி மீன் பிடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அதனை தடை செய்யக்கோரியும் சிறிமாபுர மீனவ குழு ஒன்று திங்கள் காலை ஜமாலியா பகுதியில் திருகோணமலை - நிலாவெளி பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை, ஜமாலியா பகுதியைச் சேர்ந்த மீனவர்களும் சமுத்ராகம பகுதியைச் சேர்ந்த மீனவர்களும் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளை பயன்படுத்தி வருகின்றனர் எனவும் இதனால் சிறிமாபுர பகுதியில் வசித்துவரும் சிறு மீன்பிடி தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுவருகின்றனர் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

குறித்த சட்டவிரோத செயற்பாட்டை உடனடியாக நிறுத்துமாறு கோரி முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்ட இடத்துக்கு வருகைதந்த திருகோணமலை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி மீனவர்களுடன் கலந்துரையாடியதையடுத்து இந்தப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (05)

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அதிகாரப் பகிர்வின் அவசியம்

கடந்த சில நாட்களில் வடக்கில் நடந்திருக்கக்கூடிய இரண்டு விடயங்கள் இந்த நாட்டில் ஏன் அதிகாரப் பகிர்வு, அதுவும் மைய அரசின் தலையீடற்ற உள்ளக சுயாட்சியுடன் கூடிய அதிகாரப் பகிர்வு அவசியம் என்பதை வலியுறுத்தி நிற்கின்றன.

முதலாவது சம்பவம் தொல்லியல் திணைக்களத்தின் வடக்கு அலுவலகங்களுக்கு சிங்களவர்கள் மட்டுமே நியமனம் செய்யப்பட்டிருப்பது. யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் உள்ள இரு அலுவலகங்களுக்குமாக 90 பேர் இவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கின்றனர். சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் என்ற பணி நிலைகளில் இவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது. இவர்களில் ஒரேயொருவர்கூட தமிழர் இல்லை.

அரசுத் தலைவராக கோட்டாபய ராஜபக்ஷ இருந்தபோது அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு லட்சம் இளைஞர்களுக்கான திட்டத்தில் உள்வாங்கப்பட்டவர்களே இப்போது இவ்வாறு நியமனம் வழங்கி அரச சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். தொழில் திறமை நிறைந்த பணியாளர் படையை உருவாக்குதல் என்ற திட்டத்துடன் கோட்டாபயவால் இந்த ஒரு லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதில், ஏற்கனவே அரச நியமனங்கள் பெறாத வறிய குடும்பங்களைச்சேர்ந்த இளைஞர்களுக்குஇடமளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இதற்காக இராணுவத்தினரைப் பயன்படுத்தி இறுக்கமான தெரிவு மூலம் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்டன. வடக்கு கிழக்கிலும் இதே இறுக்கத்துடன் தமிழ் இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால், கடைசியில்நியமனங்கள்வழங்கப்பட்டபோதுஅவர்களில்மிக மிகச் சொற்பமானவர்கள் மட்டுமே உள்ளீர்க்கப்பட்டார்கள். அதில் மிகப் பெரும்பாலானவர்கள் சிங்கள இளைஞர்கள் மட்டுமே.

கோட்டாபய ஆட்சி அதிகாரத்திலிருந்து மக்களால் விரட்டியடிக்கப்பட்ட நிலையில், அடுத்து வந்த ரணில் தலைமையிலான ஆளும் தரப்பு இந்த இளைஞர்களை அவர்கள்உள்ளீர்க்கப்பட்டதிட்டத்தின்அடிப்படையில்வேலைக்கு வைத்திருப்பதற்கு – அதாவது அரச நிர்வாகத்திற்குத் துணையான ஒரு தொழிற்படையாக வைத்திருப்பதற்கு – விரும்பவில்லை. அதனால் அரச அலுவலகங்களில் உள்ள சிற்றூழியர்கள் வெற்றிட்டங்களுக்கு இவர்களை இட்டுநிரப்புவதற்கு முடிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்த வெற்றிடங்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

வடக்கு, கிழக்கில் ஏற்கனவே இந்த ஒரு லட்சம் பேரில் தமிழர்கள் பெருமளவில் இல்லாத காரணத்தால் அவர்களை உள்ளீர்க்கும் சிக்கல் பெரிதாக எழவில்லை. இருந்த சொற்பப் பேர் உள்வாங்கப்பட்டனர். இந்த நிலையில் தெற்கைச் சேர்ந்த சிங்கள இளைஞர்களையும் வடக்கு கிழக்கில் உள்ள வெற்றிடங்களுக்கு உள்ளீர்க்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை இங்குள்ள அரசியல்வாதிகளின் எதிர்ப்புக் காரணமாக தடுக்கப்பட்டது. குறிப்பாக மாகாண சபை வெற்றிடங்களுக்குள் அவர்களை உள்ளீர்ப்பது தடுக்கப்பட்டது.

இதையடுத்தே கொழும்பு மைய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் தொல்லியல் திணைக்கள அலுவலகங்கள் ஊடாக, இங்குள்ள வெற்றிடங்களுக்கு மேலதிகமாக சிங்களவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இது ஒரு அடாவடித்தனமான செயல்.

அதேபோன்று, மைய அரசின் மாவட்ட நிர்வாகத்தின் அனுமதியின்றி கொழும்பின் அனுமதியுடன் மட்டும் யாழ். மாவட்டத்தில் 4 மதுபான சாலைகள், விதிமுறைகளை மீறி அமைக்கப்பட்டிருப்பதான ஒரு குற்றச்சாட்டை யாழ். மாவட்டச் செயலர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

இந்த இரு விடயங்களுமே அதிகாரப் பகிர்வு இன்றேல், நாட்டில் தமிழர்களுக்கு நியாயமாக ஒதுக்கப்படவேண்டிய ஒரு சில உரிமைகளைக்கூட மைய அரசைச் சேர்ந்தவர்கள் வழங்கமாட்டார்கள் என்பதற்கான தெளிவான உதாரணம். சுயாட்சி இல்லையேல் கொழும்பு எப்படி தமிழர்களின் வழங்களையும் வாய்ப்புக்களையும் கொள்ளையிடும் என்பதற்கான எடுத்துக்காட்டு.

இந்த நிலமை வடக்கு கிழக்கில் ஏற்படக்கூடாது என்றால் அதிகாரப் பகிர்வு – தன்னிறைவான சுயாட்சி உரிமை – அவசியமானது. இல்லையேல் மிக விரைவில் வடக்கு கிழக்கு அரச அலுவலகங்கள் முழுவதும் சிங்களவர்களால் நிரப்பப்பட்டு, தமிழர்களும் முஸ்லிம்களும் அரச அலுவலகங்களில் இருந்து அகற்றப்படும் நிலை ஏற்படும்.

# ஆளணி வெற்றிடமே இன்றி சிங்களவர்களை அள்ளிக் குவித்து வடக்கில் அரச நியமனங்கள்

**ந.லோகதயாளன்**



தொல்லியல் திணைக்களம் திடீரென வடக்கில் உள்ள தனது பணியகங்களில் தனது ஆளணி வளத்திற்கு மிக மிக அதிகமான பணியாளர்களை நியமனம் செய்துள்ளது. அதிலும் நியமனம் பெற்றுள்ள - ஒரு முஸ்லிம் தவிர - அனைவரும்சிங்களவர்கள். அதில் ஒருவர்கூட தமிழர் கிடையாது.

தொல்லியல் திணைக்களமானது தமிழர் பிரதேசத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்களை தொல்லியல்ச்சின்னங்கள் என்கிற பெயரில்பௌத்தசின்னமாகமாற்றி ஆக்கிரமிக்கின்றனர் என்ற பெரும் குற்றச்சாட்டு நீண்ட காலமாகவே தமிழர்கள் மத்தியில் உண்டு.

இந்தநிலையில்தான்தற்போது வடக்கில் தனிச் சிங்களவர்களைத் தமது அலுவலகத்திற்கு நியமனம் செய்துதொல்லியல்திணைக்களம் என்பது பௌத்த சிங்கள்த்தின் அங்கம் மட்டுமே என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் தொல்லியல் திணைக்களத்திற்கு இரு அலுவலகங்கள் மட்டுமே உள்ளன. அந்த இரு அலுவலகங்களிலும் 6 காவலாளிகளும் 6 அலுவலக உதவியாளர்களுமே அங்கீகரிக்கப்பட்ட ஆளணி. இந்த ஆளணியில் ஏற்கனவே இரு காவலாளிகளும் இரு அலுவலக உதவி-யாளர்களும் பணியில் உள்ளனர். இந்த பி.எல். 2 மற்றும் 3 பணிகளில் அலுவலக அமைவிடங்களில் உள்ள சாதாரண இளைஞர் யுவதிகளை பணிக்கு அமர்த்த முடியும். ஆனால் இவற்றையெல்லாம்மீறி இப்போது இந்த இரு அலுவலகங்களுக்கும் சாரதி மற்றும் அலுவலக உதவியாளர்கள் என்கிற பெயரில் 90 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். அதாவது 4 காவலாளிகளுக்கும் 4 அலுவலக உதவியாளர்களுக்குமாகக் காணப்படும் 8 வெற்றிடங்களுக்கு 90 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.



கோட்டாபய ஆட்சி இளைஞர்களுக்குஒருலட்சம்வேலைவாய்ப்புஎன்ற ரீதியில் ஒரு திட்டத்தைத் தொடங்கியது. கோட்டாபயஆட்சிவீழ்த்தப்பட்ட பின்னர் அந்த இளைஞர்கள் அனைவரையும் என்ன செய்வது என்று தெரியாது, அரச திணைக்களங்களுக்குள் உள்ள சிற்றூழியர் வெற்றிடங்களுக்கு நியமித்து வருகின்றனர். அப்படிப்பட்ட இளைஞர்களேஇப்போதுவடக்குதொல்லியல் திணைக்கள அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் உள்ள அடிப்படைச் சிக்கல் என்னவென்றால், இந்த ஒரு லட்சம் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு திட்டத்தில் வடக்கு கிழக்கில் மிகச் சொற்ப அளவிலானோரே நியமிக்கப்பட்டனர். அது குறித்து அப்போது ஆட்சியில் பங்காளிகளாக இருந்த தமிழர்கள் எவரும் பெரிதாக ஆட்சேபனை எழுப்பவில்லை. கோரிக்கைகளை மட்டுமே முன்வைத்தனர். அதற்கு அடுத்த கட்டத்தில் வடக்கு கிழக்கு இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படலாம் என்று கூறி அவர்களின் வாயை ஆட்சியாளர்கள் அடைத்துவிட்டனர். அதன் விளைவு இப்போது வடக்கு கிழக்கு இளைஞர்களுக்கு வங்கப்படவேண்டிய இடங்களிலெல்லாம் சிங்களவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் வடக்கு கிழக்கில் இல்லாத இடங்களுக்கும்கூட சிங்களவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.



தொல்லியல் திணைக்களத்திற்கு நியமிக்கப் பட்டவர்கள்கூட இத்தகைய சிங்கள இளைஞர்களே. தொல்லியல்த் திணைக்களத் தின் யாழ்ப்பாணம் அலுவலகத்திற்கு 30 பேரும் வவுனியாவிற்கு 60 பேரும் என 90 பேர் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் யாழ்ப்பாணத்தில் 29 பேரும் வவுனியாவில் 31 பேரும் பணிகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இதில் யாழ்பாணம் அலுவலகத்திற்கு வந்தவர்களில் 6 பேர் காவலாளிகள் எனவும் 23 பேர் அலுவலக உதவியாளர்கள் எனவும் பணி நிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் அலுவலகத்திற்கு வந்த 29 பேரில் ஒரேயொருவர் மட்டுமே முஸ்லிம். ஏனைய 28 பேருமே சிங்களவர்கள். அவர்களில் எவருமே வடக்குகிழக்கைச்சேரந்தவர்கள்இல்லை.

இப்போது பிரச்சினை என்னவென்றால் இவர்களுக்கு அந்த அலுவலகங்களில் பணி நிலை வெற்றிடம் இல்லைஎன்பதுமட்டுமல்லஇருப்பதற்குக் கூட இடமில்லை என்பதுத்தான். தொல்லியல்த் திணைக்களத்தின் அலுவலகம், நாவலர் மண்டபத்திற்கு பின்புறத்தேயுள்ள நூதனசாலை மற்றும் யாழ்ப்பாணம் கோட்டை ஆகிய இடங்களில் இவர்கள் அவசர அவசரமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்றே வவுனியாவில் நியமிக்கப்பட்டவர்களில இதுவரை வவுனியாவில் 31 பேர் கடமைகளைப் பொறுப்பேற்றபோதும் அவர்கள் தங்களிற்கான தனியான இருப்பிடங்களைத் தேட முடியாமல் அல்லல்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு தொல்லியல்த் திணைக்களத்தின் இரு அலுவலகங்களிற்கும் 90 சிற்றூழியர்களை அதுவும் மொழி தெரியாத தெற்கைச் சேர்ந்தவர்களை அள்ளி நியமித்தமை வடக்கு இளைஞர்கள்இடையேஅதிகோபத்தை ஏற்படுதியுள்ளதாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவையிலும் சுட்டிக் காட்டப்பட்டு கடும் வாதப் பிரதிவாதங்கள் முன் வைக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் அதனால் எந்தப் பெறுபேறும் கிட்டவில்லை.

சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சியின் கீழிருந்து தமிழர்கள் அதிகாரப் பகிர்வு கேட்பதன் பின்னணி இதுவே. தமது பெரும்பான்மைப் பலத்தை வைத்து சிங்களவர்கள் இவ்வாறு அத்துமீறுவதைதடுப்பதற்கோ தட்டிக் கேட்பதற்கோ தமிழர்களால் ஒருபோதும் முடியாது. அதிலும் குறிப்பாக சிங்களவர்களுடனேயே சேர்ந்து இருக்கக்கூடியதமிழர்களால் - ஆட்சியில் பங்காளிகளாக இருக்கும் தமிழர்களால் - கேட்கவோ, கேட்டு உரிமைகளைப் பெறவோ முடியாது. இதனாலேயே தமிழர்கள் தொடர்ந்தும் சுயாட்சியை வலியுறுத்தி வருகின்றனர். மத்திய அல்ல மைய அரசின் தலையீடு அற்ற சுயாட்சியாக இருக்கவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துவதும் இதற்காகவே.

இந்தப் பிரச்சினை தொல்லியத் திணைக்களத்தோடு மட்டும் நிற்கப் போவதில்லை. மாறாக வடக்கு கிழக்கில் உள்ள மத்திய அரசின் ஏனைய திணைக்களங்களிலும் எதிர்காலத்தில் தொடரப்போகின்றது. அதைத் தடுத்து நிறுத்தவோ தமிழர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைப்பெற்றுவழங்கவோ ஆட்சியில் பங்காளிகளாக இருக்கும் கட்சிகளுக்கும் திராணி இல்லை. எதிர்க்கட்சிகளானதமிழ்க்கட்சிகளுக்கும் திமிர் இல்லை என்பதுதான் சோகம். அவலம். பிரச்சினை.

**வடக்கில் தொல்லியல் திணைக்களத்திற்கு இரு அலுவலகங்கள் மட்டுமே உள்ளன. அந்த இரு அலுவலகங்களிலும் 6 காவலாளிகளும் 6 அலுவலக உதவி-யாளர்களுமே அங்கீகரிக்கப்பட்ட ஆளணி. இந்த ஆளணியில் ஏற்கனவே இரு காவலாளிகளும் இரு அலுவலக உதவியாளர்களும் பணியில் உள்ளனர். இந்த பி.எல். 2 மற்றும் 3 பணிகளில் அலுவலக அமைவிடங்களில் உள்ள சாதாரண இளைஞர் யுவதிகளை பணிக்கு அமர்த்த முடியும். ஆனால் இவற்றையெல்லாம் மீறி இப்போது இந்த இரு அலுவலகங்களுக்கும் சாரதி மற்றும் அலுவலக உதவியாளர்கள் என்கிற பெயரில் 90 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.**


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கடலட்டைப் பண்ணைகளில் சிறார் பணியாளர்கள்

## யாழ்ப்பாணத்திலேயே இந்த அவலம்

ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் மற்றும் அதனை அண்டியுள்ள தீவுப் பகுதிக் கரையோரங்களில் உள்ள பல கடல் அட்டைப் பண்ணைகளில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்என்றுயாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி பிரணவநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் குற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலை செல்லவேண்டிய சிறு வயதினர் தீவுப் பகுதி கரையோரங்களில் கடல்அட்டைப்பண்ணைக்குவேலைக்குச் செல்வதனால்பாடசாலைகளுக்குச்செல்வதில்லை எனக்கண்டுகொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பதிலளித்த அமைச்சர் பாடசாலை மாணவர்களைப் பணிக்கு அமர்த்தினார் கடல் அட்டை பண்ணைகளிற்கான அனுமதி இரத்துச் செய்யப்படும் என உடன் அறிவிக்குமாறு கூட்டத்தில் தெரிவித்தார்.

# பத்மநாதன், கருணா, பிள்ளையானை எந்த அடிப்படையில் விடுவித்தீர்கள்?

## இப்ப இப்படி கேட்கிறார் சம்பிக்க

குமரன் பத்மநாதன், கருணா, பிள்ளையான் மற்றும்ராம்மற்றும்நகுலன்என அழைக்கப்படும் இரண்டு கொலையாளிகளைஎவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷவிடம் சம்பிக்க ரணவக்க விளக்கம் கோரியுள்ளார்.

கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் இராணுவப் பாதுகாப்பில் வசிக்கிற அதேசமயம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையான் கிராமப்புற வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக விக்கிரமசிங்க-ராஜபக்ஷ அரசாங்கத்தில் பணியாற்றுகிறார்.

2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் அங்கம் வகித்த சம்பிக்க ரணவக்க, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்புகுறித்துநாரஹேன்பிட்டி கட்சி அலுவலகத்தில் வார இறுதியில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கேள்வியெழுப்பியுள்ளார்.

ஒரு காலத்தில் பிள்ளையானின் நெருங்கிய கூட்டாளியாகஇருந்தஹன்சீர் ஆசாத் மௌலானாவின் வெளிப்பாட்டின் அடிப்படையில் சனல் 4 ஆவணப்படம் எடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டினார்.

மேலும் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைப் வடக்கு மற்றும் கிழக்கில்உள்ளதமிழ்பேசும் மக்களைப்புறக்கணிக்குமாறு கட்டளையிடும் வகையில் புலிகளுக்கு பணம் செலுத்தியமைதொடர்பிலும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

அத்தோடுபெரும்குற்றச் செயல்களுக்கு காரணமானவர்களுக்கு எதிராக தமதுகட்சியைஉள்ளடக்கிய எதிர்கால அரசாங்கம் சட்ட நடவடிக்கையை ஆரம்பிக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவைதளமாகக் கொண்ட யு.என்.எச்.சி.ஆர் மற்றும் பெயரிடப்படாத ஐரோப்பிய புலனாய்வு சேவைகள் பிள்ளையானின் உதவியாளர் மௌலானாவை அணுகியதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும்என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். ஈஸ்டர் ஞாயிறு தொடர்பாக முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்னமற்றும்சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானிஅபேசேகரஆகியோர் நீதிமன்றில்சமர்ப்பித்துள்ள சமர்ப்பிப்புகளை கருத்திற்கொண்டு மௌலானாவின் குற்றச்சாட்டுக்கள் ஆராயப்படவேண்டுமென தெரிவித்துள்ளார்.

மேலும்2019ஜனாதிபதித் தேர்தலில் தேசிய தௌஹீத் ஜமாத்தின் ஆதரவை அவர்கள் எவ்வாறு பெற்றனர் என்பதைவிளக்கவேண்டும் என்றும் ராஜபக்ஷக்களிடம் சம்பிக்க ரணவக்க கேள்வியெழுப்பியுள்ளார். (05)





# காத்தான்குடியில் பெரும் தீ விபத்து

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதியோர் இல்லவீதியில்திங்கட்கிழமை மதியம்பெருமளவில்பரவியதீ மட்டக்களப்புமாநகரசபையின் தீயணைப்பு பிரிவினரினால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

கடந்ததிங்கட்கிழமைமதியம்வழமைபோன்றுவெற்றுகாணிஒன்றில்குப்பைகளை எரித்துக்கொண்டிருந்தபோது திடீரெனஏற்பட்டகடுமையான சுழல் காற்று காரணமாக குறித்த குப்பைகளில் பரவிய தீ அருகில் இருந்த ஏனைய வளவுகளுக்குள்ளும் பரவிய பாரியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாகசுமார் பத்துக்கும்மேற்பட்டகாணிகள் எரிந்துசாம்பராகியுள்ளதுடன் பல பனை மரங்களும் தென்னைமரங்களும்எரிந்து நாசமாகி உள்ளன.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு சொந்தமான தீயணைப்பு பிரிவினர் சம்பவ இடத்துக்கு உடனடியாக விரைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதன் காரணமாக அருகில் இருந்த மர ஆலை மற்றும் பாதணி தொழிற்சாலை என்பன தீ விபத்தில் இருந்து முழுமையாக பாதுகாக்கப்பட்டுள்ளன. (05)

# விபத்தில் காயமடைந்த மூதாட்டி யாழில் சாவு

யாழில் விபத்தில் சிக்கி படுகாயமடைந்த முதாட்டியொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். 74 வயதான இரத்தினசாமி நித்தியசெல்வம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நல்லூர் பகுதியில் கடந்த 4ஆம் திகதி குறித்த மூதாட்டி வீதியை கடக்க முயன்ற போது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து அவர் யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (05)

# கேரளாவின் முதல்வரை சந்தித்தார் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்



இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில்தொண்டமான் கேரள முதலமைச்சர்பிரனய் விஜயை சந்தித்தார்.

கேரள முதலமைச்சர் அலுவலகத்தில்திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த சந்திப்பில் கேரளாவுடன் இணைந்து கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா அபிவிருத்திகளை மேற்கொள்வது குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும், 1970ஆம் ஆண்டு இலங்கையில் உள்ள மலையக மக்கள் 1,480 குடும்பம் கேரளாவில் மீள்குடியேற்றப்பட்டனர். இவர்கள் ஆர்.பி.எல். நிறுவனத்திலும், கேரளாவன அபிவிருத்திகூட்டுத்தாபனத்திலும் தொழில்புரிகின்றனர். அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்துவரும் பணிகளுக்குகேரளமுதல்வர் பிரனய் விஜயன் வாழ்த்துக் கூறியதுடன், ஆளுநர் செந்தில் தொண்டமான், இலங்கைக்கு வருகைதரு மாறுவிடுத்தஅழைப்பைஏற்று இலங்கை வருவதாகவும் உறுதியளித்தார். (05)

# பிரதி பிரதம செயலர் கிழக்கில் கடமையேற்பு







கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) எம்.எம்.நஸீர் தனது கடமைகளை கடந்த திங்கட்கிழமை பொறுப் பேற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் வழங்கப்பட்ட கடிதத்துக்கமைய பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்கவால் கடந்த திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்ட கடிதத்துக்கமைய தமது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.மன்சூர், விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜீ.முத்துவண்டா, முதலமைச்சரின் செயலாளர் என்.மதிவண்ணன், ஆளணி மற்றும் பயிற்சி பிரதிப் பிரதம செயலாளர் திருமதி ஆர்.யூ.ஜலீல், சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திஸாநாயக்க உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர். (05)

## ராஜகுமாரி கொலை வழக்கு;

# இடமாற்றப்பட்ட பொலிஸ் அதிகாரிக்கு மீண்டும் அதே பதவி வழங்கப்பட்டது

எந்தவிதக் குற்றச்சாட்டுகளுமின்றி பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது உயிரிழந்த ராஜன் ராஜகுமாரி என்ற பணிப் பெண்ணின் இறப்புடன் தொடர்புபட்டார்கள் என்று குற்றச்சாட்டின் கீழ்வெலிக்கடை பொலிஸிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட பொறுப்பதிகாரி மீண்டும் அதே பதவியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார் எனத் தகவல் கிடைத்துள்ளதாக நீதிமன்றத்தில் திங்கட்கிழமை தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் ஆஜரான சட்டத்தரணி சேனக பெரேரா, இதனை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். இதேவேளை, ராஜன் ராஜகுமாரி என்ற பணிப் பெண்ணின் மரணம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வெலிக்கடை பொலிஸ் உத்தியோகத்தர்கள் நால்வரும் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (05)

# பதில் செயலாளராக மன்சூர் கடமையேற்பு



கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் பதில் செயலாளராக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர்ஏ.மன்சூர்தனதுகடமைகளை கடந்த திங்கட்கிழமை பொறுப்பேற்றுக்கொண்டார்.

கிழக்குமாகாணஆளுநர் செந்தில் தொண்டமா னால் வழங்கப்பட்ட கடிதத்துக் கமைய, பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க வழங்கிவைத்த கடிதத்தின் பிரகாரம், தனதுகடமைகளை ஏ.மன்சூர் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாணவிவசாயஅமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜீ.முத்து-வண்டா, முதலமைச்சரின் செயலாளர் என்.மதிவண்ணன், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எம்.எம். நஸீர், ஆளணி மற்றும் பயிற்சி பிரதிப் பிரதம செயலாளர் திருமதி ஆர்.யூ.ஜலீல், சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் உள்ளிட்டபலஉயரதிகாரிகள் கலந்துகொண்டனர். (05)

# கஹவத்த சம்பவத்தை வைத்து அரசியல் நடத்தவில்லை; ஜீவன்



மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அனைத்து மலையக அரசியல் வாதிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாமும் இருக்கின்றோம்.-என்றுஇலங்கைதொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வ-ழுங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் ஊடக அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார். இரத்தினபுரி, கஹவத்த பெருந்தோட்ட நிறுவனத்துக்கு உட்பட்ட வெள்ளந்துரை தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவம்போல் இனி எங்கும் நடக்ககூடாது என்பதால்தான் மலையக மக்களுக்கு காணி உரிமைபெற்றுக்கொடுப்பதற்கானவேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் கூறியுள்ளார். இது தொடர்பில் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள அமைச் சர் ஜீவன் தொண்டமான் -

வெள்ளந்துரை தோட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள மாணவி பல்கலைக்கழகம் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும், புலமைப் பரிசிலொன்றையும் வழங்கவுள்ளோம்.

அந்த குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு வேலை வழங்கப்படும் என தோட்ட நிர்வாகம்உறுதியளித்துள்ளது. இதனை நாம் எழுத்துமூலம் கோரியுள்ளோம்.

இச்சம்பவத்தை வைத்துக்கொண்டு நாம் அரசியல் நடத்த முற்படவில்லை. மக்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதே எமது நோக்கம். மலையக அரசியல் வாதிகள் கண்டனம் தெரிவிக்கின்றனர், ஜனாதிபதியின்கவனத்துக்கு கொண்டுவரப்படும் என ஓர் அரசியல்வாதி கூறுகின்றார். இப்படியான பிரச்சினைகள் பற்றிபேசி தீர்வைக்காணவே ஜனாதிபதியுடன் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அதில்பங்கேற்காமல்நடைபயணம்சென்றனர்.

ஒற்றுமையாக பயணிக்க வேண்டும் என்பதற்காக அனுசரித்து செல்கின்றோம். மக்களுக்காக பொறுமை காக்கின்றோம். எனவே, மலையகமக்களின்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மலையக அரசியல்வாதிகள் ஒன்றுபட வேண்டும். சிவில் அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் நாம் பேச்சு நடத்தவுள்ளோம். காணி உரிமையை பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. - என்று அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டுக்கு புதிய ஆட்சி ஒன்று தேவை ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்து

கட்சிக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் புதிய வேலைத் திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வரும் 16 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளில் மாத்தறையிலிருந்து ஆரம்பிக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்று நாட்டின் சகல துறைகளும் சரிந்து போயுள்ளன. நாட்டு மக்கள் இன்று புதிய ஆட்சியையே எதிர்பார்க்கின்றனர். நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் சூழ்ச்சியால் ஆட்சிக்கு வந்தமை இன்று சர்வதேசத்திற்கு கொண்டு செல்லப்பட்டு வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

எனவே நாட்டிற்கு புதிய ஆட்சியும் பொறுப்பான நிர்வாகமும் தேவை. இந்த ஆட்சியைபொறுப்பேற்கசஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. ஏனைய கட்சிகள் தேர்தல் தொகுதிக் கூட்டங்களை நடத்த ஆரம்பித்துள்ளது மாத்திரமே. நாம் நாட்டின் சகல தேர்தல் தொகுதிகளிலும் தொகுதிக் கூட்டங்களை நடத்தி முடித்துவிட்டோம்.

கட்சிக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் புதிய வேலைத்திட்டதினையும் கிராமத்திற்குகிராமம்செல்லும் புதிய வேலைத்திட்டத்தினையும் ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வரும் 16 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளில் மாத்தறையிலிருந்து ஆரம்பிக்கவுள்ளோம்.

அன்றைய தினங்களில் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைப்பாளர்களும் மாவட்டத்திற்குச் சென்று புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளல், வாக்காளர் பிரிவு கிளைகள், மகளிர் பிரிவுகள், இளைஞர் பிரவுகள், பிக்குகள் முன்னணியின் பிரிவுகளை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகளை அன்றைய தினம் ஆரம்பிக்கவுள்ளோம். அடுத்த அடுத்த மாதங்களில் இந்த வேலைத்திட்டத்தை சகல மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்துவோம்.

மகளிர் சக்தி, இளைஞர் சக்தி, கிளைச் சங்கம் மட்டுமின்றி, பிக்குகள் ஆலோசனை சபை, சர்வமதத் தலைவர்கள் ஆலோசனை சபை, தொழிற்சங்க இயக்கங்கள், சார்புடைய அமைப்புகளாலும் கட்சியைப் பலப்படுத்துவோம். அடுத்த வருடம் தேர்தலுக்கான வருடமாகும். எந்தநேரத்திலும் தேர்தலை சந்திக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது. இந்தப் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு தருமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# 900 டெங்கு நோயாளர்கள் 10 நாள்களில் அடையாளம்

தற்போதைய மழையுடனான வானிலை காரணமாக இம் மாதத்தின் கடந்த 10 நாள்களில் 900 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுபிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் கணிசமான அளவு குறைவடைந்துள்ளபோதிலும், தற்போதைய மழையுடன்கூடிய வானிலை காரணமாக நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த மாதம், சுமார் 5,000 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இந்த மாதத்தின் 10 நாள்களில், கிட்டத்தட்ட 900 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, மேல் மாகாணத்தில் மாத்திரம் 50 வீதமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இருப்பினும், கடந்த மாதத்தையும் இந்த மாதத்தையும் ஒப்பிடுகையில், மாதந்தோறும் கிடைக்கப்பெறும் தரவுகளின்படி டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை கணிசமாக குறைவடைவதை நாம் அவதானித்துள்ளோம். எவ்வாறாயினும், தற்போதைய தரவின்படி, நாடளாவிய ரீதியில் மழை பெய்து வருவதால் நுளம்புகள் பெருகும் அபாயம் உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# 11 கோடி ரூபா பெறுமதியான 45 லட்சம் வெளிநாட்டு சிகரெட்டுக்கள் சிக்கின





சுமார் 11 கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 45 லட்சம் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோதமான முறையில் இந்தியாவிலிருந்து கொழும்பு துறைமுகத்துக்கு கொள்கலனில் கொண்டுவரப்பட்டு சுங்கத்துக்கு அறிவிக்கப்படாமல் இவை கொழும்பு கிராண்ட் பாஸ், கிரேலைன் கொள்கலன் பிரிவில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே கைப்பற்றப்பட்டன என சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்தார்.

இந்திய சுங்கப் புலனாய்வுப் பிரிவினர் இலங்கையின் சுங்கப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இவை கைப்பற்றப்பட்டன.

இந்தக் கொள்கலன் கடந்த மாதம் 9ஆம் திகதி இந்தியாவின் கட்டுப்பள்ள துறைமுகத்தில் இருந்து கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

சட்டவிரோத இறக்குமதி தொடர்பில், இந்த கொள்கலனை விடுவிக்க வந்த இருவர் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்கப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# பொலிஸ் அதிகாரியினது துப்பாக்கியை பாதாள குழுத் தலைவன் திருட முயற்சி

பாதாளஉலகத்தலைவன் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர் என அறியப்படும் நதுன் சிந்தக அல்லது ஹரக்கட்டா தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்படடுள்ள நிலையில், பொலிஸ் அதிகாரி ஒருவரின் துப்பாக்கியைதிருட முயற்சித்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

ஹரக்கட்டாவுக்குப் போடப்பட்டுள்ள கைவிலங்குகளை கழற்றி வைத்து விசாரிக்கும்போது, தான்கழிப்பறைக்கு செல்ல விரும்புவதாக கூறினார் எனவும், கழிவறையில் இருந்துதிரும்பி வந்ததும், சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரின் துப்பாக்கியை திருட முயன்றார் எனவும் கூறப்படுகிறது.

இதனை அவதானித்த மற்றைய பொலிஸ் அதிகாரிகளின் தலையீட்டால் அந்த முயற்சி தோல்வியில் முடிந்ததாகவும் கூறப்படுகிறது. (05)

# மாணவன் துஷ்பிரயோகம்; 9 ஆண்டுகளின்பின் தீர்ப்பு

பாடாசாலை மாணவனை அதிபரொருவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்திய வழக்கில் 9 ஆண்டுகளுக்குப் பின்னர் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மன்னாரில் உள்ள பாடசாலையொன்றில் 10 வயதான மாணவனொருவன் அதிபரால் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குவழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மாணவன் கல்வி கற்ற பாடசாலைஅதிபர் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்தநிலையில் கடந்ததிங்கட்கிழமை மன்னார் மேல்நீதிமன்றநீதிபதி எம்.எம். மிஹாலினால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அந்தவகையில் 'அதிபர் குற்றவாளி என தீர்ப்பளித்த நீதிபதி, குற்றவாளிக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து உத்தரவிட்டுள்ளதோடு குறித்த தண்டனையை செலுத்தத் தவறினால் 6 மாதங்கள் சிறை தண்டனை மேலும் அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்துள்ளார். (05)

# கண்காணிப்பு

செயற்கைக்கோள் தொழில்நுட்பம் மூலம் நாட்டின் கடல் எல்லைக்குள் நுழையும் கப்பல்களில் இருந்து எண்ணெய் கசிவு ஏற்படுகிறதா என்பதை கண்காணிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. பிரான்ஸ் அரசாங்கத்துக்கும் இலங்கை கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபைக்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இலங்கைக்கு வரும் கப்பல்களில் இருந்து எண்ணெய்க் கசிவுகள் கடந்த பருவத்தில் பதிவாகியிருந்தன. இது கடல் வாழ் உயிரினங்களையும் கடல் சுற்றுச்சூழல் அமைப்பையும் கடுமையாகப் பாதித்தது. இதனையடுத்து, இந்த நிலைமைகளை கண்காணிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு, அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று (செவ்வாய்க்கிழமை) கைச்சாத்திடப்பட்டது. (05)



# வடிவழகன் நல்லூரான் தேர்பார்ப்போம் வாருங்கள்!



நல்லூரான் தேர்காண எல்லோரும் வந்திடுவார்
தேர்வடத்தைப் பிடிப்பதற்கு முந்தியவர் நின்றிடுவார்
ஊர்கூடி வந்தங்கே தேருழுத்து நின்றுவிடும்
நல்லூரான் தேரமரந்து நற்காட்சி தந்திடுவான்

ஆதவனின் ஒளியணைக்க ஆறுமுகன் அருள்சுரந்து
அசைந்துவரும் தாமரையாய் அரன்மகனும் வந்திடுவார்
தேரடியில் திரண்டிடுவர் தெரிசனத்தைக் காண்பதற்கு
ஆறுமுகன் தேரேற அழகுடனே வந்திடுவார்

ஊரெல்லாம் நல்லூரான் உவந்துவரும் தேர்காண
வெண்மணலில் விதைத்துவிட்ட நன்மணியாய் நிறைந்திருப்பார்
தேர்வடத்தைத் தொட்டுவிட்டால் செய்தவினை அகலுமென
தொட்டுவிட அடியார்கள் கிட்டக்கிட்டச் சென்றிடுவார்

தேரடியில் மலையாக தேங்காய்கள் குவிந்திருக்க
கூடிநிற்கும் அடியார்கள் குறையகற்ற உடைத்திடுவார்
சிதறிவிடும் தேங்காய்போல சிக்கலெலாம் ஆகவென
சிந்தையிலே அடியார்கள் செறிவாக நிறைத்திடுவார்

ஆடம்பரம் இல்லாத ஆலயமாம் நல்லூர்
அமைதியொடு ஆன்மீகம் ஆலயத்தின் சொத்து
வேண்டாத சிக்கல்களை உள்வாங்காக் கோவில்
வேலவனின் அருளொழுகும் கோவிலது நல்லூர்

ஏழை பணக்காரெலாம் இணைந்தங்கே நிற்பார்
எல்லோரும் நல்லூரான் அடியாராய் வருவார்
தேரோடும் வீதியெலாம் திரளாக நிற்பார்
தேரேறி வருமழகன் திருமுகத்தைக் காண

பெரியவரும் சிறியவரும் காவடிகள் எடுப்பார்
வருவினைகள் போக்குவென மனநினைப்பார் அவரும்
நடைபவனி மேற்கொண்டும் வந்திடுவார் அடியார்
நல்லூரன் தேர்காண பலரங்கே குவிவார்

காவடிகள் ஆடிவரும் கந்தனது சன்னதியில்
கரங்குவித்து அடியவர்கள் கந்தன்முகம் காணநிற்பார்
ஆறுமுகன் விதிவர ஆதவனும் வரவேற்பான்
அரோகரா எனுமொலியோ ஆகாயம் தொட்டுவிடும்

ஊரெல்லாம் உற்சாகம் ஊற்றெடுத்து நிற்கும்
தேர்பார்க்க யாவருமே விருப்புடனே திரள்வார்
பந்தலிட்டி பானகத்தை பலருக்கும் கொடுப்பார்
எம்பெருமான் தேர்காண எல்லோரும் விரைவார்

பட்டுடுத்தி பெண்களெல்லாம் பக்குவமாய் வருவார்
வேட்டியுடன் சால்வையுடன் ஆடவரும் விரைவார்
சிறியவரும் முதியவரும் கூடவே இணைவார்
சிவன்மைந்தன் முருகனும் தேரேறி வருவான்

வானொலிகள் தொலைக்காட்சி வர்ணனைகள் நடக்கும்
மனம்விரும்பி அடியார்கள் இசைமுழங்கி நிற்பார்
வானவரும் மகிழ்வுடனே மலர்மாரி சொரிவார்
மண்ணகத்தில் நல்லூரான் தேர்பவனி நடக்கும்

அரனாரின் திருக்குமரன் தேரமர்ந்து வருகிறான்
ஆணவத்தை அகவிருளை அகற்றிடவே வருகிறான்
வடிவழகன் நல்லூரான் தேரிழுப்போம் வாருங்கள்
அருளிடுவான் ஆறுமுகன் அவனடியைப் பற்றிடுவோம்

வடிவழகன் நல்லூரான் தேர்பார்ப்போம் வாருங்கள்
மனவழுக்கை நல்லூரான் போக்கிடுவான் நம்புங்கள்
நினைவெல்லாம் நல்லூரான் நினைப்பாக நிறுத்துக்கள்
நீள்நிலத்தில் பலவளமும் நல்லூரான் அளித்திடுவான்

வீதிவரா பலவடியார் வீடிருந்து பார்ப்பதற்கு
நாடிருக்கும் தொலைக்காட்சி நற்றுணையாய் ஆகிவிடும்
வானொலிகள் வருணனை மனமிருத்த வந்துநிற்கும்
வடிவேலன் தேரசைந்து வண்ணமுற வீதிவரும்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.


JAFFNA'S FIRST HOUSING &
CONSTRUCTION EXHIBITION
JAFFNA
HOUSING & CONSTRUCTION
EXHIBITION
2023
யாழ் மண்ணில் முதல் முறையாக
யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான
கண்காட்சி 2023
FOR ENQUIRY CALL MINHAJ 077 888 2700
கட்டிட நிர்மாணம், வீடமைப்பு
மற்றும் வீட்டு உபகரணங்கள்
தொடர்பான அனைத்து விடயங்களும்
ஒரே கூரையின் கீழ்.
அனைவரையும் அழைக்கின்றோம்
15 16 17
SEPTEMBER
MUTTRAWELI GROUNDS, JAFFNA
Official Sponsor
Hayleys
Aventura
Innovative Solutions
Organizer
Iyngaran Media Solution (Pvt) Ltd.
In Association
CCI
SRI LANKA
Chamber of Construction
Industry of Sri Lanka
Radio Partner
Print Media Partner
Digital Media Partner
வீரகேசரி
காலைக்கதிர்
Kalaikkathir

காலைக்கதிர் Kalaikkathir

# 4 அதிகார தூண்களின் மீதும் தாக்குதல் நடத்தி நாட்டை அழிக்கச் சதித் திட்டம்

## பிரசன்ன ரணதுங்க கண்டுபிடிப்பு



நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம், நீதித்துறை, பௌத்த மதம் ஆகிய நான்கு அதிகார தூண்களின் மீதும் தாக்குதல் நடத்தி நாட்டை அழிக்கும் சதித்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மேற்கத்திய நிகழ்ச்சி நிரலின் படி, சனல் 4 அந்தச் செயற்பாட்டின் ஒரு பகுதியாகும் என்றும் அமைச்சர் கூறினார்.

வீரகெட்டிய பிரதேச சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முல்கிரிகல தொகுதிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் கூறியவை வருமாறு -

இந்த பகுதியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். அதுபோல கொஞ்சம் பொறாமையும் ஏற்படுகிறது. இங்கு ஜனாதிபதிகளும் இருந்தனர்.

கம்பஹாவின் தலைவர்களும் இருந்தனர். கம்பஹாவுக்கும் இங்கும் உள்ள வித்தியாசத்தைக் கண்டு பொறாமையாக இருக்கிறது.

இந்த நாட்டை அபிவிருத்தி செய்த மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இன்று எமது கட்சியை வழிநடத்திச் செல்வதால் பெருமை ஏற்பட்டது.

அப்போது திருமதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பலப்படுத்துவதற்காக நாடு முழுவதும் சென்று செயற்பட்டவர் மஹிந்த ராஜபக்ஷ.

அன்று எங்கள் தலைவருடன் எனக்கு கொஞ்சம் நெருக்கடி ஏற்பட்டது. அப்போது நான் மஹிந்த அவர்களுடன் இருந்தேன். அவருடைய குணங்களால் நாம் அவரை நேசிக்கிறோம்.

அவர் தனது மக்களை ஒருபோதும் விட்டுவிட மாட்டார். அவருடைய ஆள் ஒருவன் தவறு செய்தால், அவனைக் கொண்டுபோய் காதைத் திருகுவார். தன் மக்களைக் காத்த தலைவன்.

அதனால் தான் 2015 இல் மஹிந்த தோற்கடிக்கப்பட்ட போது நாட்டு மக்கள் தவறை புரிந்து கொண்டனர். அவர் தோற்கடிக்கப்பட்டதும் அரசியலில் இருந்து விலகுவார் என பலரும் நினைத்தனர். அன்று கேட்டைப் பிடித்து தொங்கிக் கொண்டு பேசிக் கொண்டிருந்தவர்கள் முகநூலில் அவரை அடித்தார்கள். ஆனால் அவரை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு குறிப்பாக தென்பகுதி மக்கள் அவருக்கு தலைமைத் துவத்தை வழங்கினர். அந்த கௌரவத்தை தென் னிலங்கை மக்களுக்கு வழங்க வேண்டும்.

நாய் இறந்தால் அதன் உண்ணியும் இறந்துவிடும் என்று சொல்கிறோம். இன்றும் நாம் பெருமையுடன் கூறுகின்றோம். மஹிந்த அவர்கள் தோற்றபோது, நாட்டின் சிறப்பை அறிந்த பெரும்பான்மையான மக்கள் அவருடன் இருந்தார்கள். அன்றைய தினம் மஹிந்த காற்றுடன் நாடு சுற்றி வந்தோம். பசில் ராஜபக்ஷவின் தலைமையில் பத்து பதினைந்து பேரை கூட்டி பலமான அரசியல் கட்சியை உருவாக்கினோம். அதன்பிறகு, குறுகிய காலத்தில் நடந்த உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி பெற்றோம்.

69 லட்சம் பெற்று ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றோம். பொதுத்தேர்தலில் 150 எம்.பி.க்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் நாங்கள் அரசாங்கத்தை அமைத்தோம். உறுப்பினர்கள் இல்லாமல் கட்சி இல்லை. நீங்கள் கிராமத்தில் அன்பாக இருப்பதால் 4 வருடங்களில் இதையெல்லாம் எங்களால் செய்ய முடிந்தது.

நீங்கள் பேஸ்புக்கில் கட்சிகளை உருவாக்கலாம். தலைவர்களையும் உருவாக்கலாம். ஆனால் கிராமத்தில் அப்படி இல்லை. அண்மையில், நாட்டில் கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடியுடன் நெருக்கடி ஏற்பட்டது. ஒரு போராட்டம் நடந்தது. கட்சி என்ற ரீதியில் எமது கட்சியினரே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். எங்கள் வீடுகள் எரிக்கப்பட்டன. எங்கள் உறுப்பினர்கள் தாக்கப்பட்டனர். கொலை செய்யப்பட்டனர்.

இவையனைத்தும் ஓர் அமைப்பின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டன. மொட்டில் இருந்தவர்களை ஏன் அப்படி அடித்தீர்கள்? ஜனநாயக முறையிலான தேர்தல் மூலம் எதிர்க்கட்சியில் உள்ள எந்த அரசியல் கட்சியும் ஆட்சியைப் பிடிக்க முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும்.

எனவே, எமது மக்களை அடித்து வீழ்த்தி ஆட்சிக்கு வர முயற்சித்தார்கள். பொலன்னறுவையில் எமது நாடாளுமன்ற உறுப்பினர் கொல்லப்பட்டு வீதியில் இழுத்துச் செல்லப்பட்டு முக நூலில் பதிவிட்டுள்ளனர். மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதை செய்யப்பட்டனர். அவர்களை பேர ஏரியில் வீசி மக்களை அடித்தார். நாங்கள் மன உளைச்சலுக்கு உள்ளானோம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 300 பேரின் வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. நாங்கள் என்ன தவறு செய்தோம்? 30 வருடகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்த மஹிந்தவிற்கும் அவ்வாறே செய்தனர். இந்த வியங்களை 3மூ ஆன கும்பல் செய்தது, நாட்டின் பெரும்பான்மையினர் அல்ல. எங்களைப் பயமுறுத்துவதற்காகவே அந்தச் செயல்கள் செய்யப்பட்டன. 1977ல் எங்கள் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. ஆனால் எமது அரசாங்கம் இருந்தபோது, எங்கள் ஜனாதிபதி இருக்கும்போது அது நடக்கும் என நாம் நினைக்கவில்லை.

போராட்டம் செய்தவர்கள். விபச்சாரிகளும் போதைப்பொருள் வியாபாரிகளும் இன்று ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். போராட்டம் அமைதியாக தொடங்கியது. ஆனால் அது கடத்தப்பட்டது. பாதாள உலகத்தினர், போதைக்கு அடிமையானவர்கள் ஆட்சி செய்தனர். இது மட்டும் நடக்கவில்லை. நாட்டை அழிக்க வேண்டும் என்றால் நிறைவேற்று, சட்டமன்றம், நீதித்துறை ஆகிய மூன்றையும் தாக்க வேண்டும். மதத் தலைவர்கள் காவல்துறையினரை அடிக்க வேண்டும். அப்போது ஒரு நாடு அழிந்துவிடும். இவை மேற்கத்திய நிகழ்ச்சி நிரல்களின்படி நடக்கும் வியங்கள். முகநூலில் பிக்கு பற்றிய விடயங்களை பதிவிட்டு பௌத்தத்தை தாக்கியுள்ளனர். நிறைவேற்று அதிகாரியாக இருந்த கோட்டாபய ஊடகங்கள் மூலம் தாக்கப்பட்டார். 225 பேரும் வேண்டாம் எனக் கூறி பாராளுமன்றத்தில் நம்பிக்கை இழந்தது.

தற்போது சனல் 4 ஊடாக நீதித்துறைக்கு கேடு விளைவிக்கும் வகையில் செய்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களும் இவ்வாறான கருத்துக்களை கூறுகின்றனர். இராணுவம், காவல்துறை மற்றும் புலனாய்வுத் துறைக்கு எதிரான சித்தாந்தங்களை உருவாக்குகிறார்கள். இறுதியில் என்ன நடக்கும்? இந்த நாட்டை அழிக்க ஆரம்பம் ஏற்படும். எமது கட்சியை வழிநடத்தும் மஹிந்த ராஜபக்ச அவர்கள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்த தலைவர் என்பதை கட்சி என்ற வகையில் பொறுப்புடன் கூறுகின்றோம். மேலும், கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் நாட்டு மக்களை கொவிட் தொற்றுநோயிலிருந்து காப்பாற்றினார்.

மக்களின் உயிரைக் காத்த தலைவர்கள் எங்கள் கட்சியில் உள்ளனர். அன்றைய தினம் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார், ஏனென்றால் கட்சியை விட நாடு பெறுமதி மிக்கது என்பதால். நாட்டுக்காக எப்போதும் தியாகம் செய்தவர். இன்று 69 லட்சம் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் செயற்பட்டு வருகின்றோம். ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீளக் கட்டியெழுப்புவார் என நம்பி இன்று கட்சியைப் பலப்படுத்தி அவருக்கு உதவுகின்றோம். இது கட்சி என்ற வகையில் தலைமை எடுத்த முடிவு.

எமது கட்சியைப் பலப்படுத்தும் வேலைத்திட்டம் தற்போது நாடு முழுவதும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எதிர்வரும் எந்தவொரு தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றிபெறக்கூடிய சூழலை நாம் உருவாக்கியுள்ளோம். நான் சொல்கிறேன், தெற்கில் தகுதி தெரிந்த மக்கள் இருக்கிறார்கள். இந்த நாட்டுக்கு மஹிந்த ராஜபக்ஷவின் சேவையைப் பாராட்டுகின்ற மக்கள் இந்த மாகாணத்தில் உள்ளனர். உங்களுக்கான கடமைகளையும் பொறுப்புகளையும் நாங்கள் தொடர்ந்து செய்வோம்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜானக திஸ்ஸகுட்டியா ராச்சி, டபிள்யூ.டி.வீரசிங்க உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (05)

# சாதனை மாணவிக்கு பாராட்டு

(வி.ரி.சகாதேவராஜா)

பொத்துவில் வரலாற்றில் இரட்டைச் சாதனை புரிந்து, கபொத உயர்தரத்தில் மூன்று ஏ சித்தி பெற்ற றொட்டைக்கிராம மாணவி செல்வி சாந்தலிங்கம் றியோன்சியாவை மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் திங்கட்கிழமை நேரில் சென்று பாராட்டினார்.

அவருக்கு பரிசுப் பொருட்களை வழங்கியதோடு, பல்கலைக்கழகம் சென்று படிப்பைத் தொடர விசேட புலமைப் பரிசில் ஒன்றையும் வழங்கினார்.

பொத்துவில் ஊரணி சரஸ்வதி வித்யாலயத்தில் வைத்து அவருக்கான பாராட்டு நிகழ்வு நடைபெற்றது.

இராமகிருஷ்ண மிஷனால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல்கலைக்கழகம் சென்று படிக்கும் வரையான புலமைப் பரிசில் திட்டத்தில் றியோன்சியாவும் உள்வாங்கப்பட்டார். அதற்கான ஆவணங்கள் மாணவியிடம் வழங்கப்பட்டன. அடிப்படை வசதிகளற்ற றொட்டைக்கிராமத்திலிருந்து வரலாற்றில் முதல் முறையாக 3 ஏ பெற்ற சாதனை படைத்தவர் மாணவி றியோன்சியா.



பொத்துவில் தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து முதல் தடவையாக 3 ஏ சித்தி பெற்றும் இரட்டை சாதனைகளைப் படைத்துள்ளார்.

# 4 ரஷ்யர்களைத் தேடி பொலிஸ் வலைவீச்சு

ஹபராதுவ, தல்பேயில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றில் வைத்து ரஷ்ய பிரஜை ஒருவரைத் தாக்கி காயப்படுத்தியதாக கூறப்படும் 4 ரஷ்ய பிரஜைகளை கைது செய்வதற்கான விசாரணைகளை ஹபராதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காயமடைந்த 39 வயதான ரஷ்ய பிரஜை காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என ஹபராதுவ பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்ய தேடப்பட்டு வரும் ரஷ்ய பிரஜைகள் நால்வரும், தாக்கப்பட்ட ரஷ்ய பிரஜையும் இலங்கை நாணயத்துக்கு ரஷ்ய ரூபிள் பரிமாற்றத்தில் ஈடுபட்டவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பணப்பரிவர்த்தனையின் போது ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதையடுத்து, இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்களை தாக்கிய நான்கு ரஷ்யர்களும் பாதிக்கப்பட்டவரிடமிருந்த 3,800,000 ரூபாவை அபகரித்துச் சென்றனர் எனப் பொலிஸில் செய்த முறைப்பாட்டில் எடுத்துச் சென்றதாக கூறப்படுகிறது. (05)

# சோமபுர கல்லூரிக்குள் புகுந்த யானைகளால் கட்டடம் சேதம்



கந்தளாய் கல்வி வலயத்தில் சேருநுவர பிரிவில் அமைந்துள்ள சோமபுர மாதிரி கல்லூரிக்குள் புகுந்த காட்டு யானைகள் ஆரம்ப வகுப்புகள் நடைபெறும் கட்டடத்தை சேதப்படுத்தியுள்ளதாக சேருநுவர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. கட்டடத்தின் சுவர்கள், கதவு, பாதுகாப்பு கம்பி வலை என்பன சேதமடைந்துள்ளதுடன், இதன் காரணமாக மாணவர்களின் படைப்புகள், மாணவர்களின் உபகரணங்களும் சேதமடைந்துள்ளன. சேதமடைந்த கட்டடத்தில் வகுப்புகளை நடத்துவது அபாயகரமானது என அதன் அதிபர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிராந்திய கல்வி அலுவலகம் மற்றும் வனத்துறைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# சனல் –4 கூறுபவை எல்லாமே உண்மையான விடயங்களல்ல

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

சனல் 4 கூறுவது எல்லாம் உண்மையான விடயங்களாகக் கருத முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

சனல் 4 கூறுவது எல்லாம் உண்மையானவை எனக் கூற முடியாது. ஆனால், இவற்றை அப்படியே விட்டுவிடவும் முடியாது.

விசாரணை ஒன்று நடத்த வேண்டும். அரசாங்கம் தற்போது ஓய்வுபெற்ற நீதிபதி ஊடாக விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

உண்மைகள் முதலில் கண்டறியப்பட வேண்டும். யாரையும் காப்பாற்றவோ அல்லது யாரையும் பிரச்சினைக்குள் தள்ளவோ அன்றி, நேர்மையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் முழுமையான அறிக்கைகள் நாடாளுமன்றுக்கும் மக்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும்.

இனியும் இவற்றை மூடி மறைத்துக் கொண்டிருக்கக்கூடாது. சர்வதேச விசாரணை ஊடாக உண்மைகள் வெளிவருவதுதான் அனைவருக்கும் நன்மையாக அமையும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# பாரதியாரின் 102ஆவது ஆண்டு நினைவு தினம் வவுனியாவில்

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 102 ஆவது ஆக்டு நினைவுதினம் திங்கட்கிழமை வவுனியாவில் அனுஸ்டிக்கப்பட்டது.

குறித்த நினைவுதினம் வவுனியா நகரசபை ஏற்பாட்டில் குருமண்காட்டில் உள்ள பாரதியாரின் திருவுருவச்சிலையடியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அறிஞர் பெருமக்கள், சமூக ஆர்வலர்கள், நகரசபை உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கல்முனை முருகன் ஆலயத்தில் பொலிஸ் திணைக்களம் வழிபாடு

இலங்கையின் பொலிஸ் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 157 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு கல்முனை முருகன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி அலியார் றபீக் ,கல்முனை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ.வாஹிட், கல்முனை பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.சிவநாதன், ஆலய நிர்வாகத்தினர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (05)

# பிரித்தானியப் புலம்பெயர் தமிழர்கள் நீதிவேண்டி சர்வதேசத்திடம் கோரிக்கை



'இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும்' எனக் கோரி பிரித்தானியாவில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் சர்வதேச நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பிரித்தானியாவில் டிராஃபல்கர் சதுக்கம் பகுதியில் அண்மையில் புலம்பெயர் தமிழர்களால் இலங்கையில் வலிந்து காணாமல் ஆக் கப்பட்டோருக்கு நீதி கோரி முன்னெடுக்கப்பட்ட கவனவீரப்புப் போராட்டத்தின் போதே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தில் பெருமளவான தமிழ் புலம்பெயர் மக்கள் கலந்துகொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# போதை ஒழிப்பை வலியுறுத்தும் மிதிவண்டி பயணிக்கு வரவேற்பு

## வவுனியாவில் நேற்று வழங்கப்பட்டது

போதைபொருள்ஒழிப்பு உள்ளிட்ட 3 விடயங்களை முன்னிறுத்திநாடுபூராகவும் மிதி வண்டி பயணத்தை மேற்கொண்டுள்ள இளைஞனுக்கு வவுனியாவில் நேற்று வரவேற்பளிக்கப்பட்டது.

புத்தளம்மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் "போதைப்பொருள் ஒழிப்பு, கவனமாக வாகனத்தை செலுத்துங்கள், வெளிநாட்டு பயணிகளே வாருங்கள்" என்ற கோரிக்கைகளை வலியுறுத்திநாடுமுழுவதும் உள்ள மாவட்டங்களுக்கு மிதி வண்டியில் பயணம் மேற்கொண்டுள்ளார்.

புத்தளத்தில் ஆரம்பிக்கப்பட்ட மிதி வண்டிப் பயணமானது இன்று வவுனியாவை வந்தடைந்தது. வவுனியாவை வந்தடைந்த இளைஞருக்கு வவுனியா, பட்டானிச்சூர் பகுதியில்வைத்துவரவேற்பு அளிக்கப்பட்டது.

இதில் அப்பகுதியியைச் சேர்ந்த பள்ளிவாசல்கள் பிரதிநிதிகள், விளையாட்டு கழக பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு குறித்த இளைஞனின்பயணத்திற்கு தமது ஆதரவினை வழங்கினர்.

100





# சிறப்பாக இடம்பெற்ற விஞ்ஞான கண்காட்சி





வவுனியா,அல்-இக்பால் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞானக் கண்காட்சி சிறப்பாக இடம்பெற்றது.



வித்தியாலயத்தின் அதிபர் ஏ.கே.உபைத் தலைமையில் வவுனியா தெற்கு வலய விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் ஏ.ஜெய்கீசனின் பங்கேற்புடன் இது இடம்பெற்றது.

மாணவர்களது சிந்தனை மற்றும் புத்தாக்கத்தில்உருவானவிஞ்ஞான கண்டு பிடிப்புக்கள், விஞ்ஞான ரீதியான பரிசோதனைகள், மற்றும் விஞ்ஞான ரீதியான விளங்கங்களை நிறுவும் படைப்புக்கள் என்பன காட்சிப்படுத் தப்பட்டதுடன், தெரிவுசெய்யப்பட்ட ஆக்கங்களுக்குபரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், அயற் பாடசாலை ஆசிரியர்கள், அயல் பாடசாலை மாணவர்கள்மற்றும்பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிட்டனர்.

# அரச மருத்துவர்கள் வவுனியாவில் நேற்று நண்பகலில் ஆர்ப்பாட்டம்



வவுனியா பொது வைத்தியசாலை வைத்தியர்கள் நேற்றுக் கவன வீர்ப்புப்போராட்டம்ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

வைத்தியசாலை முன்பாக நண்பகல் 12.00 மணியளவில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

நாடு முழுவதும் அமைதி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்திருந்தது. அதற்கு அமைவாகவே இந்த ஆர்ப்பாட்டம் வவுனியாவில் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வைத்தியர்கள் 'மருந்துகள்இல்லை. சுகாதார கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது, தனியார் மருத்துவத்தை வளர்க்க இலவச மருத்துவத்தை அழிக்காதே, வைத்தியர்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்து, வைத்தியர்களை வெளியேற நிர்பந்தித்து இலவச வைத்திய சேவையை முடக்கும் சதியை முறியடிப்போம், திறமையற்ற சுகாதார நிர்வாகிகளே வைத்தியர்களின் தொழில் உரிமையில்கைவைக்காதே' என எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.




அத்துடன், இலங்கையில் இருந்து பலவைத்தியர்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாது மருந்துகள் பற்றாக்குறை காணப்படுகின்றது. வைத்தியர்களின் வெளியேற்றதால் எமது சுகாதார துறை மேலும் பலவீனம் அடையும். எமது கோரிக்கைகள் தொடர்பாக ஆட்சியாளர்களுக்குத் தெரியப்படுத்தியும் எமக்கு தீர்வு கிடைக்காமையால் ஆர்ப்பாட்டத்தை செய்துள்ளோம். இதற்கும் தீர்வு இல்லையெனில் வேலை நிறுத்தப் போராட்டத்தைமேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வைத்தியர்கள் தெரிவித்தனர்.

(100)

# முல்லைத்தீவிலும் வைத்தியர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்




நாட்டடின்பல்வேறு மாவட்டங்களிலும் நேற்று அரசவைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் முன்னெடுத்த போராட்டம் முல்லைத்தீவு வைத்தியசாலையிலும் முனனெடுக்கப்பட்டது.

வைத்தியர்கள் நாட்டை விட்டுச்செல்கின்றமையினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் தீர்வொன்றைப் பெற்றுத்தருமாறு கோரி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பணியாற்றும்அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தினைச் சேர்ந்த மருத்துவர்கள் வைத்தியசாலையின் சிகிச்சைநடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மருத்துவமனை முன்பாக இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நண்பகல் 12.30 தொடக்கம் 2.00 மணிவரை இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. முன்னெடுத்துள்ளார்கள்.

இதற்கு முன்னர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்த நோயாளர்களுக்குதுண்டுபிரசுரங்களை வழங்கி போராட்டத்தின் கோரிக்கையினை தெளிவு படுத்தினார்கள்.

கடந்த ஆண்டு மட்டும் 700 வைத்தியர்கள் நாட்டை விட்டுவெளியேறியுள்ளார்கள். தற்போது நிலவும் மருந்து தட்டுப்பாடுபலஅரசவைத்தியசாலைகளில் பல்வேறு மருந்துகள் தட்டுப்பாடான நிலை காணப்படுவதுடன் தரம் குறைந்த மருந்துகள் ஆட்சியாளர்களால் இறக்குமதி செய்யப்படுவதன் காரணமாக நோயாளிகளின் அநாவசிய உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

வைத்தியர்கள் நாட்டை விட்டுவெளியேறுகின்றாா்கள். அவர்களின் வெளியேற்றம் தொடர்ந்த வண்ணமுள்ளது இவ்வாறு வைத்தியர்கள் பல்வேறு காரணங்களை முன்வைத்து வெளியேறுகின்றார்கள்.

வைத்தியர்களின் வசதிகள் செய்து கொடுக்கப்படாமை அதிகரித்த பணவீக்கம் போன்ற பல்வேறு காரணங்களால் வைத்தியர்கள்நாட்டைவிட்டு வெளியேறுகின்றார்கள் இதன் காரணமாக சுற்றயல் வைத்தியசாலைகள் வெகு விரைவில் இழுத்து மூடும் ஆபத்துஉள்ளது. ஏற்கனவே பல வைத்தியசாலைகளில் ஆளணிகுறைந்தநிலையில் வைத்தியர்கள்கடமையாற்றி வருகின்றார்கள்.

இவ்வாறான பிரச்சினைகளால் இலவசசுகாதார சேவையானதுகடுமையான பாதிப்பினை சந்தித்து வருகின்ற நிலையில் எனவே இந்த கோரிக்கைகளை முன்வைத்து அரச வைத்தியர்களால் இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.09.2023இல் வெளியிடப்பெற்றது.